உ

# மயில்விடு தூது



ஆசிரியர் :

கவியரசு கு. நடேசக் கவுண்டர்

T.18675

வெளியீடு :

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில்

பழனி.

1999

[ விலை ரூ. 7/-

உ

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி துணை



வெளியீடு :

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

பழனி.

1999

முதல் பதிப்பு : 1954
இரண்டாம் பதிப்பு : 1973
மூன்றாம் பதிப்பு : 1999

பழனி

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில்

அறங்காவலர் குழு.

---

திரு. கே.சி. பழனிசாமி, தலைவர், அறங்காவலர் குழு.

அறங்காவலர்கள் :

திரு. க. குமாரசாமி, பி.ஏ., பி.எல்.,

திரு. எம்.ஏ. ராமமூர்த்தி, எம்.சி.

திரு. வெ. இராஜசேகரன்

திரு. கு. கிருட்டிணமூர்த்தி

தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர்

அச்சிட்டோர் :

மாணிக்கம் அச்சகம், தருமபுரி–1. போன் : 60822.

# மூன்றாம் பதிப்பின் பதிப்புரை

**தி. ஜெயராமன்,** பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர்,
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
பழனி.

பழனியாண்டவர் மீது நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றி–லக்கியங்கள் தமிழ்ப்புலவர்களால் பாடப்பெற்றுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்க சிற்றிலக்கியமாக, கவியரசு கு. நடேசக் கவுண்டர் இயற்றிய "பழனியாண்டவர் மயில்விடுதூது" விளங்கி வருகின்றது. பக்திச்சுவையும், இலக்கியச் சுவையும் இந்நூலில் இணைந்தமைந்திருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

பழனி மலையின் சிறப்பு, கோவிலில் நிகழும் பூசைகள், பூசையின்போது கமழும் நறுமணங்கள், தேவார–திருப்புகழிசை, பழனி முருகனை வழிபடவரும் அடியார் கூட்டங்கள், முருகனுக்குச் செய்யப்பெறும் அபிடேகங்கள், மயில்வாகனத்தில் முருகப் பெருமான் திருவுலாவரும் காட்சி, வேண்டுவோர்க்கு வேண்டுவனவற்றை வழங்கும் முருகப் பெருமானின் அருள் பாலிக்கும் திறம் முதலிய செய்திகளையெல்லாம் அழகாகத் தொகுத்து ; பழனியாண்டவனுக்கு வாடாத பாமாலையைச் சூட்டியுள்ளார் கவிஞர்.

மயிலுக்கு அமைந்த பல பெயர்களைத் தொகுத்துக் கூறியிருப்பது இந்நூலாசிரியரின் கவித்திறனைக் காட்டுகின்றது. புறா, குயில், வண்டு, தென்றல், மேகம் முதலியவற்றைத் தூதுவிடுவதைவிட மயில்தான் முருகப் பெருமானிடம் தூது செல்வதற்குப் பொருத்தமானது என எடுத்துரைத்துள்ள பாங்கு, தருக்க முறைப்படி அமைந்ததோடு மட்டுமல்லாமல் கவிஞரின் புலமைத்திறத்தினையும் காட்டுகின்றது.

மாணிக்கவண்ணனை, பவளத்திரளை, ஆணிப்பொன்னை, பெருஞ் சோதியை, ஆறமுதை, நறுந்தேனை, மெய்ஞானத் தீங்கனியை, வேலேந்திய அருள்நிறைந்த பழனியாண்டவனை என்பால் மயிலே! விரைவில் அழைத்து வருக எனக் கவிஞர் மயிலைத் தூதுவிடுவது அவரது ஆழ்ந்த முருகபக்தியைப் புலப்படுத்துகின்றது.

நூல் மறுபதிப்புத் திட்டத்தின் கீழ் இந்நூல் வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து பலவகையாலும் துணைநின்று உதவிய தமிழக முதல்வர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் **டாக்டர் மு. கருணாநிதி** அவர்களுக்கும், தமிழ் ஆட்சிமொழி பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் **மு. தமிழ்க்குடிமகன்,** எம்.ஏ., பி.எச்டி., அவர்களுக்கும் எனது இனிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர பலவகையிலும் உதவிய அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திரு. **சுகவனேஷ்வர்,** இ.ஆ.ப., அவர்களுக்கும் மற்றும் அறங் காவலர்கள் குழுத்தலைவர் திரு. **கே.சி. பழனிச்சாமி,** அறங்காவலர்கள் திரு. **க. குமாரசாமி,** பி.ஏ., பி.எல்., திரு **எம்.ஏ. இராமமூர்த்தி,** திரு. **வெ. இராஜசேகரன்,** திரு. **கு. கிருட்டிணமூர்த்தி** ஆகியோர்களுக்கும் என்னுடைய அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இநந்நூல் நன்முறையில் அச்சிட்ட தர்மபுரி மாணிக்கம் அச்சகத்தாருக்கும் நன்றி உரித்தாகுக.

பழனிமலையின் சிறப்புக்களையும், வரம் தருவள்ளல் ஞான தண்டாயுதபாணியின் அருள்பாலிக்கும் திறத்தினையும் அடியார்கள் அறிந்து கொள்வதற்கு இந்நூல் பெரிதும் துணைபுரியும் எனக் கருதுகின்றேன்.

பழனி
22–11–99

**தி. ஜெயராமன்.**

## இரண்டாம் பதிப்பின் முகவுரை

இறைவனை மனக்கண்ணால் கண்டு பின் சில காரணங்களால் காணாதபொழுது பரிவாற்றாமையால் வருத்தமேற்படுகிறது. தலைவனுக்கு தூது அனுப்புவது என்ற முகத்தான் தலைவனின் தன்மை, அவன் அளித்த இன்பம் எல்லாம் விரிவாக எடுத்துரைப்பது மரபு.

*"அதிசயம் அநேகம் உற்ற பழநி"* யைக் கண்டு ஞான சற்குருவாகிய அருள்மிகு தண்டாயுதபாணியைத் தரிசனம் செய்து பெரும்பேறு பெற்ற ஆசிரியர் கவியரசு நடேசகவுண்டர் அவர்களின் உளப்பெருக்கு ஊற்றெடுத் தோடச் செய்த நூல் *"பழனியாண்டவர் மயில்விடுதூது"*. மயிலைத் தூது அனுப்பும் வாயிலாக முருகன் பெருமை, அப்பெருமான் அமரும் படை வீடுகள், அவற்றுள் தனிச் சிறப்புக்கொண்ட சிவகிரி என்னும் பழநி மலையின் மாண்பு, நந்தியாச்சிரமத்தின் சீர், இறைவனை வணங்கச் செல்லுங்கால் கண்ட காட்சிகள், தொண்டர்தம் குறை கூறல், பின் "வைதாரையும் வாழவைக்கும்" அருள் வள்ளலின் கருணையைப் பெற்று, தேர்ச்சியடைதல் இவை அனைத்தையும் தீந்தமிழ்க் கவிதையில் உருவாக்கி யிருக்கிறார் இந்நூல் ஆசிரியர். இதைப் படித்து அகம் கனிந்து, உணர்ச்சி மேலிட்டால் யான் பெற்ற இன்பம் இவ் வையகம் பெற வேண்டுமென்ற எண்ணத்தால் இத்திருக் கோயிலில் இறை பணியாளராகப் பணிபுரிந்துவந்த திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.,

அவர்கள் தன் பதவிக் காலத்தில் இக்கவிதையின் பொருளை வசன நடையாக தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி 1954ம் ஆண்டில் இத்திருக்கோயில் வெளியீடாக வெளியிட்டிருந்தார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் உயர்திரு கே. எஸ். நரசிம்மன், ஐ.ஏ.எஸ்., அவர்களின் ஆலோசனைப்படியும், இத்திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் திரு. பு. மனோகரன், அறங்காவலர்கள் திரு. வி.வி.ஆர்.எம். கந்தசாமி, பி.எஸ்சி., திரு. என். நாச்சிமுத்து, எம்.எல்.ஏ., திரு. புலவர் சி. பழனிச்சாமி, எம்.எல்.ஏ., திரு. ஏ. பச்சையப்ப கவுண்டர் ஆகிய இவர்களின் விருப்பத்திற் கிணங்கவும் இந்த நூல் 1973ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இரண்டாம் தேதி நடைபெறும் பழனி ஞான தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயில் திருக்குட நன்நீராட்டு வைபவத்தின் போது இரண்டாம் பதிப்பாக வெளியிடப்படுகிறது.

இந்நூல் முருகனடியார்கட்கு மட்டுமின்றி தமிழார்வம் கொண்டோருக்கும், சித்தாந்த சாத்திரங்களின் பயிற்சி ஓரளவு உடையோருக்கும் இது உதவும்படியாக அமைய வேண்டுமென்ற கருத்தினில் வெளியிடப் பெறுகிறது. அனைவரும் வாங்கிப் பயனடையக் கேட்டுக் கொள்கிறேன்.

வி. சௌ. கோதண்டபாணி, பி.எஸ்சி., பி.எல்.,
துணை ஆணையர், நிர்வாக அதிகாரி
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

பழனி
2–9–73

உ

# பழனியாண்டவர்
# மயில்விடு தூது
## (வசனம்)

தான் காதலித்துத் திருமணஞ் செய்துகொண்ட தலைவனை விட்டுப் பிரிந்து தலைவி தனியே இருக்கிறாள். தலைவன் திரும்ப வரவேண்டிய காலமும் கடந்துவிட்டது. பிரிவாற்றாமைக்கு வருந்துகிறாள் காதலி. பிரிவு நோயால் தன் மனம் படும்பாட்டைத் தலைவனுக்கு எடுத்துச்சொல்ல தூதுக்குகந்த *பறவைகளையும், பொருள்களையும் பெருமைப் படுத்தி ஒவ்வொன்றின் மூலமாகத் தன் விண்ணப்பத்தைத் தெரிவிக்கிறாள். இது சிற்றின்பக் காதல்.

பசு (உயிர்) பிறப்பு இறப்புக்களின் விட்டகலாப் பாசத்தால் கட்டுண்டு உழன்று திரியும்போது, பதியை நோக்கிப் பசப்புற்று வருந்தி அவனை அடைய விரும்புவதே வீட்டுக் காதல் எனப்படும்.

இது பேரின்பமாதலால், உள்ளங் கவர்ந்த கள்வனைக் காணவும், அவன் திருநாமத்தைக் கேட்கவும் மனம் அவாவு கிறது. காதல் முறையிலே ஆண்டவனை நோக்கி, தூது

---

* தூதிலே ஈடுபடக் கேட்கப்படும் பறவைகளாவன – அளி (வண்டு), குருகு (கொக்கு), வாரணம் (சேவல்), நாரை, கபோதகம் (புறா), அன்றில், குயில், பூவை, கிளி, மயில், மான், புகையிலை, தமிழ், பொன் முதலியன.

என்ற அகப்பொருள் இலக்கணத்தால் தன் பாட்டுக்கு இணையில்லாச் சம்பந்தன், சிவகதிக்கு வழிகாட்டிப் பரிந்து பாடியுள்ள பாடல்கள் சிறந்த இன்பம் தருவதுடன், நம் பந்தமும் அறுத்தெரியப்படக் காரணமாகிறது. தலைவி கூற்றாக சம்பந்தப்பெருமான் தோணிபுரப் பதிகத்தில் கூறிய தூதின் பொருள் அறிந்தார் சிவபோகம் சேர்வார் என்று அவரே கூறுகிறார். இங்கே தலைவி உயிர்; தலைவன் பதி; தூது செல்வோர் பூதாதி தத்துவங்கள்.

திருஞானசம்பந்தன் சேவடியைச் சென்னிமேற் கொண்ட தமிழ் மொழிக்கும் சிவ நெறிக்கும் தலை சிறந்த தொண்டாற்றி வரும் கவியரசு கு. நடேச கவுண்டரவர்கள் தலைவியுள்ளங்கொண்டு, தலைவனாகிய பழனி ஆண்டவனை அடைய அவாவுகிறார். மயிலைத் தூதாக விடுகிறார். தமிழ்ச் சுவை, பொருட்சுவை, பத்திச்சுவை நனி சொட்டச் சொட்ட மயில்விடு தூது விண்ணப்பித்துள்ளார். அவ்வாறு பரிந்து பாடிய பாடல்களின் கருத்தை எவரும் அறிந்து அனுபவிக்க உரை நடையில் எழுதலானேன்.

பழனியாண்டவர் மயில்விடு தூது என்னும் பிரபந்தம், பழனியிலே தண்டாயுதபாணியைத் தெரிசிக்கப்பெற்று, இன்ப அனுபவம் சிறிதே பெற்று, அஃது மறைய, மீட்டும் அவ் வனுபவம் பெறும்பொருட்டு, முருகனை அழைத்து வரும் படியாக மயிலை ஆசிரியர் தூதுவிடுப்பதாக அமைந்துள்ளது.

## சுப்பிரமணியன் ஒப்பறு பெருமை

பழனியாண்டவர் மயில்விடு தூது சுமார் 400 கண்ணி களையுடையது. சுப்பிரமணியன் ஒப்பறு பெருமை 1–21

கண்ணிகளில் விளக்கப்பட்டுள்ளது. சைவ சித்தாந்த சாத்தி ரங்களில் கண்ட நுண்ணிய உண்மைகள் சுருங்கிய முறையில் விளக்கப்படுகின்றன. இக்கண்ணிகளின் பிற்பகுதி சுப்பிரமணியன், முருகன், குருசாமி, குகன், குமாரன் என்னும் இளம் பூரணனது திருநாமங்களின் பெயர்க் காரணத்தை விளக்குவனவாக அமைந்துள்ளது.

சுப்பிரமணியன், திருமாலும், பிரமனும், இந்திரனும், நான்கு வேதங்களும், தேவர்களும், ஏனைய யாவர்களும் ஆராய்ந்தறிதற் கரியவன். அவன் அநாதி. யாதொரு குறியும் குணமில்லாத தலைவன். ஞான நெறியால் அறிவை அறியும் அறிஞர்கள் உள்ளத்துள் இடைவிடாது வீற்றிருக்கும் பரமசிவன் அவனே. சிவத்தை அறியும் அறிவிற்கு அறிவானவன். அவ்வறிவிலே இடையறாது ஊறும் பேரின்ப வெள்ளமும் அவனே. உயிர்கள் மும்மல நோய் நீங்கி உய்யும் பொருட்டு வைத்த கருணையினால், உரு, அரு, அருஉரு, எனப் பல வடிவங் கொள்வான். அவ்வடிவங்களும் தன்னை வழிபடுவாரது பக்குவத்திற்கேற்றபடி இருக்கும். கலப்பால் எல்லா உயிர்களும் அவனே. ஆதலால் அவன் அத்துவிதப் பொருளாய் உளன். அவன் அருளால் அவனை அறிவது அல்லாமல் இவன் இன்ன தன்மையை உடையவன் என்று யாராலும், எக்கருவியாலும் தெரிவிக்க முடியாதவன். எல்லாச் சமயத்தாரும் தத்தம் அளவுகளால் அளந்தறியும் அவ்வப் பொருளாக இருப்பவனும் அவனே. வேதங்கள் கூறும் பிரமமும் அவனே. ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழிலும் செய்கின்ற சதாசிவமும் அவனே. ஓம் என்ற பிரணவத்தின் பொருளும் அவனே. ஒருவரால் படைக்கப்

படாத திரு உருவமும், மாறாத இளமையும், நீங்காத தெய்வ மணமும் பொருந்திய முருகனும் அவனே. எண்ணா யிரங்கோடி மன்மதர்கள் அழகு ஒருங்கு திரண்டாலும், இவனது காலடிக்கும் ஒப்பாகாது. பிரணவத்தின் பொருள் அறியாத பிரமனைச் சிறையிலே வைத்து, வணங்கிய தந்தைக்கு செம்பொருள் உபதேசித்து ஆட்கொண்ட பரமகுருசாமியும் அவனே. நெடுமாலைக்கையாற் குறுக்கிய அகத்திய முனிவருக்கு அருள்புரிந்த குருநாதனும் அவனே. எல்லா உலகங்களும் தனக்கே உடைமை ஆகாத குக சாமியும் அவனே. மன்மதன், 'தான் முன்னமே அரன்விழி நெருப்பில் மாய்ந்தது நன்று' என்று எண்ணும்படி அவனைத் தாழ்த்தும் குமாரசாமியும் அவனே. ஆன்மாக்களின் தளையாக உள்ள மும்மலக்குற்றங்களையும் நீக்கும் குமார பரமேசனும் அவனே. உயிர்களின் உள்ளக் குகையிலே மேவிய குகனும் அவனே. உயிர்களாகிய சேனைகளுக்குத் தலைவனாகிய சேனாதிபதியும் அவனே. எத்தனையோ கோடிக்கணக்கான பெயர்கள் படைத்த முழு முதற் பொருளும் அவனே.

## அறுமுகப் பரமன் அமர்படை வீடுகள்

அப்பெருமான் குன்றாத அன்புடையாரின் பிறவி விடாய் தீர்க்கும் பரங்குன்றம், கடல் அலையில் சங்கு முழங்கும் செந்தில் நகரமும், சித்தர் குழாம் சேவிக்கும் திரு ஆவினன் குடியும், நீரகத்தால் அந்தணர் வழிபடும் ஏரகமும், தினைப் புனங்களிலும் குறவர் முன்றில்களிலும் அருவி முத்துக்களை இறைக்கும் குன்றங்களும், முகில் முழவுபோல் முழங்க மயில் ஆடுகின்ற பழமுதிர் சோலையும், சிறந்த

திருவிழாக்கள் நிறைந்த நகரங்கள் பலவும் கோயிலாகக் கொண்டு வீற்றிருந்து மன்னுயிர்கட்கு இன்பம் வழங்குகின்றான்.

## பழனிமலையின் பலபெரும் சிறப்புக்கள்

அப்பதிகள் அனைத்திலும் திருவாவினன்குடியே செவ் வேட்பிரானுக்குச் சிறந்த திருக்கோவில். தமிழ்மூவேந்தரில் முதல்வர் சேரர். அவருள் ஒருவர் நடராசரின் சேவடிச் சிலம்பொலியை நாடொறும் கேட்கும் அருட்செவி படைத்தவர். மன்னுயிர்கள் எண்ணியவற்றை எண்ணியவாறே அறிந்து நீதி செலுத்திய சிறப்பால் கழறிற்றறிவார் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர். முதலை உண்டபாலனை மீட்ட தம்பிரான் தோழருக்கு நண்பர். அந்த நம்பி யாரூரர் யானைமேல் கயிலை செல்லத் தாமும் குதிரைமேல் உடன் சென்றவர். 'ஆதி உலா' ஆகிய அமுதை அரன் செவியில் வார்த்தவர். அச்சேரனுடைய ஆட்சியில் உட்பட்டது கொங்குநாடு. கொங்கின் ஒரு பகுதி வைகாவூர் நாடு; அதில் ஆதி வராகமலை; அதற்கு அண்மையில் கோங்குவனம்; உமையாள் தவம் செய்த கூவிளவனம்; திருமகள் நோற்ற குளிர்பொழில், தேவர் ஆவும், சூரியனும் தவம் செய்த நெல்லிவனம் என்பவற்றாற் சூழப்பட்டது திருஆவினன்குடி. அங்கே செந்நெல்லும், கன்னலும் ஒருங்குறும் வயல்கள். நீலப் பட்டுக் குடையை விரித்து நிறுத்தினாற் போன்ற கமுகஞ் சோலை. பொற்குடம் போன்ற நெற்றுக்கள் நிறைந்த தென்னஞ் சோலை. கொலையானைக் கைம்முகம் போன்ற குலைவாழைக் காடு. மாஞ்சோலை, பூஞ்சோலை, மலர்வாவி முதலியன அந்நகரத்தின் நாற்றிசை

யிலும் நிறைந்துள்ளன. செவ்வேட் பிரானுக்குச் சிறந்த தலம் இது என்று ஆன்றோர்கள் பலரும் கூறக் கேட்டு மகிழ்ந்தேன். பண்டைத் தவப்பயனும் தூண்டிற்று. அப்பதியை அடைந்தேன். சரவணப் பொய்கையில் நீராடினேன். திருநீறு அணிந்தேன். ஆறு எழுந்து எண்ணினேன். பின் திரு வாவினன் குடியிற் செவ்வேளை வணங்கி விடை பெற்றேன்.

## அருண்மிகு நந்தி ஆச்சிரமச் சீர்

திருவாவினன் குடியிற் செவ்வேளை வணங்கி விடை பெற்று, எங்களைக் கொத்தடிமை கொண்ட குருவாகிய சாது நந்தியடிகள் வாழும் நந்தியாச்சிரமம் அடைந்தேன். அடியார் பலர் ஆண்டிருந்தனர். அன்னோர் வேதம், ஆகமம் முதலிய கலைகளை நேர்மையாய் ஆய்ந்தவர்கள். மாயையை மாய்த்தோர். இம்மை, மறுமை, வீடு ஆகிய நலங்களைச் சிவபெருமான் திருவடியே அருளும் எனத் துணிந்தவர்கள். அவர்களிற் சரியை, கிரியை, செய்யும் தொண்டர் சிலர். சிவயோகிகள் சிலர். ஞானியர் சிலர். மோனியர் சிலர். நாதாந்தர், போதாந்தர், வேதாந்தர் முதலியோரும் அவருள் உளர். பலவகைக் கொள்கையர், பலவகையான நிலையினர் ஆயினும், 'சிவனடியார்' என்னும் ஒரே கொள்கையினால் ஒருவரோடு ஒருவர் உள்ளங்கலந்த உறவினர். அவர்கள் தனித்தனிக் குழுவாக ஞானநூல் ஆய்வோரும், தேவாரம் முழக்குவோரும், திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலியன பாடுவோரும், வடமொழியிலே மார்க்கண்டர், உபமன்னியு, புட்பதந்தர் முதலிய முனிவர்கள் அருளிய துதிகளைப் பாடுவோரும், அடியார்கள் அமுது செய்வதற்கெனத் திருவமுது அடுவோரும், அமுது படைப்

போரும், வேறு பலவகைத் தொண்டுகள் இயற்றுவோருமாக இருந்தனர். இத்தகைய பெருந் தொண்டர்கள் சேவிக்க எமது சாது சற்குருநாதர் வீற்றிருந்தார். அவருடைய திரு மலரடிகளை வணங்கி, திருவிழிக் கடையின் அருள்பெற்று, பழனிமலைக்குச் செல்லத் திருவனுஞ்ஞையும் பெற்றேன்.*

## பலவினை யொழிக்கும் சிவமலை மாண்பு

முன்னொருக்கால் அகத்திய முனிவர் கயிலை சென்றார். சிவனை வணங்கினார். சிவ வடிவம் சக்தி வடிவுமாயிருந்த இரண்டு மலைச் சிகரங்களைக் கண்டார். ‘‘இவற்றைப் பொதிய மலைக்குக் கொண்டுபோய் யான் வழிபட எனக்கு அருளுக’’ எனச் சிவனை வேண்டிப் பெற்றுத் தென்றிசை நோக்கி வருகையில், பூர்ச்சவனத்தில் இடும்பனைக் கண்டு, அம்மலைச் சிகரகங்களைக் காவடியில் வைத்துப் பொதிகைக்குக் கொண்டுவரப் பணித்தார். அவ்வாறே அவன் கொண்டுவரும் வழியில், வராக மலைக்கு வடக்கில் இப்போது பழநி என்னும் பாங்கரில் காவடியை இறக்கினான். பசியாற்றிக் கொண்டான். மீண்டும் காவடியை எடுக்க முயன்றான். ஆனால் முடியவில்லை. முருகன் ஒரு சிறுவனாகச் சிவமலையின்மேல் நின்றதால், இடும்பன் அசைத்தும் அம்மலை அசையவில்லை. சிறுவன்மேற் சினங்கொண்டு எதிர்த்தான் இடும்பன். முருகனும் அவனுடன் பொய்ப்போர் செய்து கொன்றான். இடும்பி வேண்ட, அவனுக்கு மீண்டும் உயிருதவித் தன் தொண்ட

* இப்பகுதியிற் கண்ட செய்திகள் அனைத்தும், சிறிதும் உயர்வு நவிற்சியின்றி முற்றிலும் உண்மை என்பதைப் பழனி தவத்திரு சாது சுவாமிகளாரது நந்தியாச்சிரமத்துக்கு ஒருமுறை சென்றவரும் நன்குணர்வர்.

னாக்கி என்றும் தன் அருகில் இருக்க அருளினான். அன்று முதல் என்றும் முருகன் தண்டாயுதபாணிக் கோலமாய் அம்மலைமேல் வீற்றிருக்கின்றான். 'பழம்நீ' எனப் பரமனாற்பெயர் பெற்ற முருகன் வீற்றிருப்பதாற் சிவமலை பழநிமலை ஆயிற்று. பழநி மலை மீது செல்லக் கதிரவனும் திகைப்பான். காமனை முனிந்த முனிவர் மனம்போல பெருமை உடையது இம்மலை. விந்த மலையை அடக்கிய அகத்தியன் வந்து தரிசித்தது இம்மலை. தேவர்களெல்லாம் வந்து வணங்குவது இம்மலை. இயமனுக்கு அஞ்சியவர்க்கு அரணாவது இம்மலை. புலவர்கள் பாடும் புகழுடையது இம்மலை. தஞ்சமென வந்தார் விரும்பும் வரமனைத்து மளிப்பது இம்மலை. தெய்வ தருக்கள் பொருந்தியது. சோலை சூழ்ந்தது. யானை விளையாடும் சுனைகள் பொருந்தியது. முல்லைக்கொடிகள் நிரம்பியது.

பாம்பும், பிறையும், நீரும், முகிலும் முடிமேற் சேர்வதனாலும்; செம்பொன் தன் மேனியில் திகழ்வதனாலும், தன்மேல் யானையும், வேங்கையும், பயில்வதனாலும், பால், தேன், நெய் அபிடேக மாடுவதனாலும், மானையிடத்தி லேந்தி, மயிலை ஆகத்தில் இருத்திச் சிறப்புக் கண்ணார்ந்து, *தான் சிவரூப மென்பதனை வடிவாலும், செயலாலும் எல்லார்க்கும் உணர்த்துகிறது இம்மலை. பிரம்ம மயமான சோதிமலை. பிரமன், நெடுமால் போற்றப் பேறுதரும் பழநிமலை. கங்கை நதியின் கரைமேவும் காசியிலும் துங்கமிகு பழநித் தொன்மை மலை. மங்காது பொங்கும் அதிசயங்கள் பூத்த மகிமை மலை. ஈரேழுலகம் போற்றும் இன்பமலை. ஒருதரம் சேவிக்கப் பிறப்பறுக்கும் பெரிய

* மலையை சிவனோடு ஒப்பிடும் சிலேடையை 94–97 கண்ணிகளில் காண்க.

மலை. அருணகிரியார் போற்றும் பழநிமலை. இத்தகைய பழநி மலையின் தாழ்வரையைச் சார்ந்தேன்.

## அன்பர் குழாத்தொடு அணிவரை இவறல்

அடிவாரத்தில் விநாயகரைத் தரிசித்து வணங்கியபின் அடியார்கள் குழாத்தொடு மலை ஏறினேன். அவர்கள் மொட்டையிட்டு, உடல் முழுவதும் திருநீறணிந்து, காவடி தோளிற் சேர்த்து, இயங்கள் ஒலிப்ப மலை ஏறிக்கொண்டிருந்தனர். அடியார்கள் உள்ளம் உருகி உடல் புளகித்து "முருகா! முருகா!" என மொழிவார்கள். "ஆறுமுகா! ஆறுமுகா!" என்பார்கள். "சிவசுப்பிரமணிய வேலவா!" என்பார்கள். "பழனியாண்டவா!" என்பார்கள். சிலர், முருகன் தங்கள் வறுமையை நீக்கியதை மொழிவார்கள் சிலர் நோயை நீக்கியதைச் சொல்லுவார்கள். சிலர், மணம் புணர்வித்ததை வழுத்துவார்கள். மக்கட்பேறு அளித்ததை மகிழ்ந்துரைப்பார் சிலர். எதிரிகளை நீக்கியதை எடுத்துரைப்பார் சிலர். கல்வி அளித்ததைத் கனிந்துரைப்பார் சிலர். ஞானநிட்டை அளித்ததை நவில்வார் சிலர். பேரின்ப மளித்ததைப் பேசுவார் சிலர். இன்னும் தத்தமக்கு செவ்வேட்பிரான் அருளியதை எல்லாம் பேசுவர் சிலர். உலகில் எத்தனையோ தீர்த்தங்கள், எத்தனையோ தலங்கள், எத்தனையோ மூர்த்திகள் இருந்தாலும், பழநி மலைக்கும், சண்முக நதிக்கும், தண்டாயுதபாணிக்கும் ஒப்பாகுமோ என்பார் சிலர். கற்பூரம், தேங்காய், பழம் அபிடேகப் பொருள்கள், நேர்த்திக் கடன்கள் கொண்டு போவார் பலர். பலவகை மொழி பேசும் பல நாட்டினரும் அக்கூட்டத்தி லிருந்தனர். அவர்களைக்கண்டு கண்ணும் மனமும்

களிகூர்ந்தன. இடும்பன் சன்னதியடைந்தேன்; வணங்கி அருள் பெற்றேன். பின் உச்சிமலையடைந்தேன். கோயில் வலம் வந்தேன். கொடி மரத்தின் முன் தண்டனிட்டேன். கோயில் வாயில் நுழைந்தேன்.

## குமரன் கோயில் குலவும் சிறப்பு

கோயிலின் உள்ளே சந்தனத்தின் பரிமளம், மாலைகளின் பூமணம், தேன், நெய், கருப்பஞ்சாறு, பஞ்சாமிர்தம் முதலியவற்றின் மணம், குங்கிலியம், அகில் முதலிய புகைகளின் மணம், என்பவற்றுள் எது மிகுந்துள்ளது என்று சொல்ல முடியாது. தேவாரம், திருப்புகழ், பிறகீதங்கள் ஓதும் ஓசை, நாதசுர வாச்சியம், கண்டாமணி முழக்கம், தொண்டர்கள் ‘அரகரா’ என்னும் ஆர்ப்பு ஒலி இவற்றுள் எது பெரிதென்று சொல்லுதல் எளிதன்று. ஒருவர் மார்பிலணிந்த திருநீறு மற்றவர் முதுகில் படியும் படியாக அடியார்கள் நெருங்கிச் செவ்வேட் பிரானைச் சேவித்து நின்றனர். அவர்களைக் கண்டு நானும் பாவித்து நின்று பரவினேன். அப்போது தண்டபாணி கொண்டிருந்த கோலத்தை மாற்றி அபிடேகம் செய்யத் தொடங்கினர்.

## அபிராமி மைந்தன் அபிடேகமாடல்

எண்ணெய், நெல்லி, மஞ்சள், ஆனைந்து, பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, பஞ்சாமிர்தம், தேன், இளநீர், பழங்களின் சாறு, சந்தனக் கலவை, பன்னீர், தபன கலச நீர் என்னும் அபிடேகம் எல்லாம் முருகன் ஆடினான்.

## தண்டபாணி கொண்ட மெய்க் கோலம்

பின் ஈரம் ஒற்றி அரையிற் பொன்னாண் பூண்டான். வேத கோவணம் உடுத்தான். உயிர்களை வருத்தும் மும்மலப் பகைவரை அழித்தற்குக் கொண்ட போர்க்கோலம் போலக் கல்லாடையை அரையிற் கட்டினான். உத்தரியம் தோளில் அணிந்தான். நெற்றிமுதல் அங்கமெலாம் வெண்ணீறு பூசினான். நெற்றியில் பொற்பொட்டிட்டான். மணி மாலைகள் அணிந்தான். தொங்கல், இண்டை, கண்ணி, வாசிகை முதலிய மாலைகள் அணிந்தான். கண்டிகை முதலிய திருவாபரணங்கள் அணிந்தான். தண்டாயுதம் ஒருகையிற்றாங்கினான். வல்லசுரரை மாய்த்து நல்லசுரரைக் காத்த வடிவேலைத் தோளிற் சேர்த்தினான். திருஅரையில் ஓர் கைவைத்து, நின்றான். எங்களை வருத்தும் பிறப்பையும், எம் தலையில் பிரம்மன் எழுதிய தீயெழுத்தையும் அழிப்பதும், அடியார் சித்தத்திலும், வேத சிரத்திலும், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாட்டின் அடிகள் ஒவ்வொன்றிலும், சிவன், உமை என்ற இருவர் திருவிழிகளிலும் விட்டு நீங்காதனவாகிய திருவடிகளிற் சிலம்புகளை அணிந்தான்.

## தேசமர் வேலவன் பூசனைச் சிறப்பு

நிலக்கண்ணாடியிற் கோலம் கண்டான். பலவகை வாத்தியங்கள் நிலம் அதிர முழங்கின. பலவகை இன்னடிசில்கள், கனி வகைகள், தேங்காய், பானீயங்கள் முதலியவற்றைக் கைதொட்டான். பஞ்சவாசங்கள் நுகர்ந்தான். திருமுகத்தின் வேர்வை ஒற்றப்பெற்றான். தீபம், தூபம்,

திருநூறு, கண்ணாடி, குடை, சாமரை, ஆலவட்டம், சாந்தாற்றி முதலிய உபசாரங்களை ஏற்றான். நான்கு வேதங்கள், திருப்புகழ், கந்தபுராணக் கவிதை, இன்னிசை வாத்தியங்கள் முதலியன கேட்டான். நடனங் கண்டு மகிழ்ந்தான். கற்பூரத்தீபங் கண்டான். இவ்வாறு நிகழ்ந்த பூசனையைக் கண்டோர்க் கெல்லாம் விபூதியும், வேண்டும் வரங்களும் வழங்கினான்.

## முருகப் பெருமாள் திருவுலாக் காட்சி

நீலக் கடல்மேல் இளஞ் சூரியன் உதித்தாற்போல் மயில் வாகனத்தில் திருவுலா வந்தான். அவன் அழகுக்குத் தோற்ற மன்மதன் திறை கொடுத்தது போன்ற முத்துக்குடை நிழல் செய்தது. 'முருகன் என்னிடம் வளர்ந்தவன்' என்ற உரிமை கொண்டாடி, கங்கை நதி அங்கு வந்தது போலச் சாமரைகள் வீசின. ஆலவட்டங்கள் காற்றசைத்தன. பூம்பொய் கையில் நீராடிப் பூந்தாதும் தேனும் தன் மெய்யிற் பூசி, அசைந் தசைந்து முருகன் முன்னடைந்து சேவித்தது தென்றற் காற்று. தவிலோசை முழங்கிற்று. இயங்கள் ஒலித்தன.

## விசாகப் பெருமான் தசாங்கச் சிறப்பு

சாமதேவதம் புகழும் ஓம், சதாசிவ ஓம், சுப்ரஹ்மண் யோம் என்னும் பெயரினான். மலையை வில்லாகக் கொண்ட சிவனே வடிவுகொண்ட சிவமலையான். தன் கருணைபோல் பெருகி வருகின்ற ஷண்முகநதியும், வேண்டுவன எல்லாந்தரும் வரத்தாறும் உடையன், ஆவினன் குடியான். புலவர் சொல் பாமாலையும் கடப்பமாலையும் அணிந்தான். மேலுலகும், கீழுலகும் நொடியிற் கடந்து வரும் மயில்

வாகனத்தான். கயிலைமலை நடந்து வருவது போன்ற *யானையான். மலவிருள் நீங்கவும், அருட்சோதி வரவும், கூவுஞ் சேவலான். தன்னையடைந்தவர்க்கு இன்பங்கள் தருவான். 'வம்மின்' என்று எல்லோரையும் அழைக்கும் மும்முரசான். படைப்பு முதல் ஐந்தொழிலையும் பிரமன் முதல் ஐவராற் செய்விக்கும் ஆணையான் என்று எடுத்து இவனுடைய தசாங்கத்தைச் சிலர் ஏத்தி வந்தனர்.

## நீபத் தாரோன் கோபப் பிரசாதம்

மற்றொரு பக்கத்தில் இவன் பிரமன் தலையில் குட்டிச் சிறையில் அடைத்ததையும், நாரதன் செய் வேள்வியில் வந்த ஆட்டுக்கிடாவை அடக்கி ஏறியதையும், பன்றியின் கொம்பை முறித்துப் பரமனுக்குத் தந்ததையும், கிரவுஞ்ச மலையை அழித்ததையும், யானைமுகா சூரனைக் கொன்றதையும், சிங்கமுகா சூரனைக் கொன்றதையும், சூரன் ஆகிய மாமரத்தைச் சிதைத்ததையும், இன்னும் இவை போன்ற மற்றச் சேவகங்களையும் செப்பி வந்தனர். மற்றோர் இடத்தில் இவன் தேவர்களின் துயரம் தீரச் சிவனுக்கு மகனாகி, கார்த்திகை மாதர் அறுவர் கண்டு மகிழச் சரவணப் பொய்கையில் விளையாடியதையும், சிவனார் மனங்குளிர உபதேசம் செய்ததையும், கும்பமுனிவருக்கு குருவாக்கு அருளியதையும், தேவர் சிறையை நீக்கியதையும், நக்கீர தேவர் அருளிச் செய்த "திருமுறுகாற்றுப்படை" கேட்டுருகிப் பூதத்தைக் கொன்று அவரைத் தடுத்தாட் கொண்டதையும், முருகம்மையாரின் வெட்டுண்ட கைவளர அருளியதையும், "கோழியினைப் பாடும் வாய் குஞ்சினைப் பாடாது" எனப்

* முருகனது யானையின் பெயர் பினிமுகம்

பெருமை பேசிய பொய்யாமொழிப் புலவர் மொழி பொய்யாகும்படி, முட்டையையும் புகழ்ந்து பாடுவித்து அவரை ஆட்கொண்டதையும், அருணகிரிநாதரை ஆட்கொண்டு, நோய் நீக்கி இன்பமளித்து, உலகுய்யத் திருப்புகழ் பாடுவித்ததையும், இன்னும் இவை போல வணங்குவார் யாவர்க்கும் வரையாது வழங்கும் வள்ளன்மையையும் எடுத்துப் போற்றி இசைத்தனர் பலர். அரன் திருமகன் வந்தான், அண்டர்கள் முதல்வன் வந்தான், திருமால் மருகன் வந்தான், கொற்றவையின் புதல்வன் வந்தான், செக்கர்வேல் வந்தான், சிவஞானபண்டிதன் வந்தான், பிறவி நோய்க்கு மருத்துவன் வந்தான், சீவன் முத்தி தருபவன் வந்தான், என்றெல்லாம் சொல்லிச் சேவித்தனர். தவசியர், ஞானியர், முனிவர், விண்ணவர், மண்ணவர் அனைவோரும் மதியம் உதிக்கக் கண்ட கடல்போல ஆனந்த வெள்ளம் பெருகி, அலைவீச, ஆரவாரிக்க, ஆனந்த வடிவனாகிய பழனி யாண்டவன் திருவுலா வரக்கண்டேன்.

## அண்டர்கோன் திருவைத் தொண்டன் கண்டார்தல்

பழநியாண்டவன் திருவுலாக்காட்சியால், என் ஊனிலும் எலும்பிலும் இன்பப் பெருவெள்ளம் பாய்ந்து நிறைந்து, இடம் போதாமையால் வழிந்து புறத்தே பொழிந்ததுபோல் கண்ணீர் பெருகிற்று. "இன்பமயமாகிய வீட்டினை, ஆனபய பத்திவழி பாடதனால் இம்மையிலேயே அன்பர்கள் பெறுவார்கள்" என்று அருணகிரிநாதர் அருளிய திருவாக்கின் வலிமையை நான் அறிந்தேன். உடலை மறந்தேன். உயிரை மறந்தேன். வஞ்சனை செய்யும் மனத்தையும் மறந்தேன். நான் என்பதையும் மறந்தேன். நான் என்பதையும் மறந்தேன் எல்லாம் மறந்தேன். இந்த இன்பநிலை விரைவில் மறைந்தது

கண்டு வருந்தினேன். இன்றளவும் பலகாலம் சென்றது. மீண்டும் அவ்வின்பநிலை வருமோவென்று அன்றுமுதல் இன்று வரை ஆவல் கொண்டுள்ளேன்.

## அன்பன் இன்ப அனுபவம் விழைதல்

முருகன், ஒன்றும் அறியாத என் உள்ளத்தை நெருப்பில் இட்ட மெழுகுபோல் ஆக்கினான். என் சிந்தை மிக வருந்தியும், அவன் ஒரு தடவையேனும், சிறிது பொழுதேனும் வந்து அவ்வின்ப அனுபவம் மீண்டும் தந்திலன். என் மனத்துயரை என்னென்று சொல்லுவேன்? காதல் இளங்காளை, ஒரு கன்னிக்கு மாலையிட்டு மீண்டும் அவளை நோக்காமை தகுமோ? ஆடும் பருவத்தே மாலை யிட்டவன், அறியும் பருவத்தில் அருள் செய்யாமை அவன் பெருமைக்கு ஏற்றதாகுமோ? இன்னுமொருமுறை எம் பெருமான் அத்தகைய இன்பம் தருவானோ? தன்பால் ஆசை அருளிய ஆண்டவன் ஆளாமல் மோசமும் செய்வானோ?

## தொண்டன் தன் துயரைத் தோகைக்கு உரைத்தல்

அவன் அருளையே அல்லும் பகலும் நினைந்து பித்தனாயிருக்கின்றேன். உள்ளம் ஒடுங்கப் பெறுகிலேன். உள்ளத்துள் முருகன் சேவடி கண்டு அன்பினால் வரும் இன்ப வெள்ளத்தில் மூழ்கிலேன். மாயை செயும் துன்பப் பெருக்கிற் சுழலுகின்றேன். மகமாயை களைந்திட வல்லபிரான் முகமாறும் மொழிந்தும், மௌன சுகம் ஏன் இன்னும் எனக்கு வந்தபாடில்லை? வல்வினையின் கொடுமை தீர்ந்தபாடில்லை. உள்ளம் தேறவில்லை. மகளிர் விழிவலையினின்று தாண்டவில்லை. பொன்னாசை குறையவில்லை. வீடு, வயல் என்ற ஆசைப் பைசாசம் நீங்கவில்லை. நீசரைப் பின்பற்றும் நினைப்பு நீங்கவில்லை.

எனது, யான் என்னும் மயக்கம் தீரவில்லை. பல நூலிற் சிக்குப்பட்ட அறிவு விடுபடவில்லை. அடியேன் இவ்வாறோ ஆவது? வேலன் சேவடிக்கு அன்பு வைத்தவரையும் தீவினைகள் வருத்துமெனில் உய்வார் இனி யார்? முருகன் என் உள்ளத்தே வாராமல் இருக்கவும், கருணைக் கண் பாராமல் இருக்கவும், திருவடிமலரென் தலையில் சூடாதிருக்கவும் எனக்கும் அவனுக்கும் ஏதேனும் பெருவழக் குண்டோ? முன்பு அவன், அரனார் நெற்றிக்கண் பொறியிலு தித்தான்; நீள் கவலை ஓங்கும் சிதைவுற்ற என் உள்ளத் தாமரையிலுதியான். வீங்கு புனற் கங்கைக்கு மகன் முறைமை யுடையோன். நாயேன் அகம் கைக்கும் தன்மையை ஒழித்திலன். (மனச் சஞ்சலத்தை நீக்கவில்லை) அழகிய கமலப் பொய்கை பொறுக்கப் பொருந்தியிருந்தான். அடியேன் பொய்கை பொறுக்கப் பொருந்திடான்; வன்னக (வல்+நகம்=வலிமையுடைய மலை) மேன்மைக் கோயில் மன்னினான், என் அகமாகிய கல்லைக் கோயிலாகக் கொண்டிலான்; அன்னை வளைக்க கந்தவடிவானான். என் நெஞ்சவளைக்குள் கந்தாகி வாரான்; சிறையில் கிடந்த சயந்தனைச் சொப்பனத்திலே தேற்றினவன் என்பால் சொப்பனத்திலும் ஏன் வரவில்லை? தந்தை மகிழ ஒரு மொழி சொன்னவன், என் சிந்தை மகிழ ஏன் ஒரு மொழியேனும் சொல்லவில்லை? அலைகடல் வற்ற வேல் விட்டவன், என் கவலைக் கடல் வற்ற ஏன் மனம் வைக்கவில்லை? மலையின் நெஞ்சம் பிளந்து சிறை நீக்கி னவன், என் வினையின் வஞ்சம் பிளந்து ஏன் இன்னும் பிறவிச் சிறையினின்று என்னை நீக்கிலன்? தஞ்சம் அடைந்த என்னை அஞ்சல் என்னாததனால் கவலை உற்றேன்.

## ஐயனருள்வனென் றடியான் தேறல்

முன்பு ஒருகால் தேவர்களை வதைத்து, மீண்டும் ஈந்து தன் விசுவரூபம் காட்டித் தன் உண்மையை உணர்த்தியவன். எனக்கும் அவ்வாறு உண்மை உணர்த்தானோ? அச்சுதற்குச் (திருமால்) செம்மேனி தந்தளிந்த செவ்வேள், என் மாசழித்து இம்மையிலே எனக்கும் செம்மைதர மாட்டானா? தீயோர்கள் பாசத்திற் சிக்கினரை மீட்டோன், என் தீயவினைச் சிக்கைச் சிதையானோ? பாண்டியனுடைய நோயை நீக்கிக் கூனை நிமிர்த்தியவன், என் பிறவிக் கூனையும் நீக்கானோ? முன் ஒருத்தியின் (முருகம்மையார்) துயரை நீக்கிக் கை தந்தவன், என் துயரை நீக்கிக் கை தர மாட்டானோ? வணிகன் உளத்துயரை மாற்றியவன், பணிவோனது உளத்துயரை மாற்றானோ? வெந்த எலும்பைப் பெண்ணாக்கியவன், என் வெந்த மனத்தைத் தேற்றானோ? என்பு இழை பொறுத்தருளும் இறைவன் மகன், என் பிழையைப் பொறுத்தருள இசையானோ?

அடியார் பிழை பாராதவன் எனவும், தமிழால் வைதாரையும் வாழவைக்கும் வள்ளல் எனவும், ஏழைக் கிரங்கும் என் அப்பன் எனவும், மோழைமை நீக்கும் முதல்வன் எனவும், புலவர்க்கு உசாத் துணை எனவும், கலந்தோரைக் காத்தருள்வான் எனவும், ஒருகால் 'முருகா' என்பார் சென்னியின் மேல் இருகாலும் வைத்தருள்வான் எனவும், கலியுக வரதன் கந்தன் எனவும், துன்பத்தில் நம்மையவன் கைவிட மாட்டான் எனவும் நம்பி, பெரியோர் ஒருவரைப் புகலடைந்து, அவர்பால் என் குறை கூறி ஆண்டவன்பால் தூது விடுக்கத் துணிந்தேன்.

## * கலபமயிலின் பலபெயர்ப் பெருமை

களி மயிலே! மாதர்நடை கற்ற மயூரமே! முகில்கண்டு, உவகை பூத்துத் தழைபரப்பி செம்மை-பொன்மை, பசுமை முதலிய ஒளி வீசி, வானகந் தழுவி, ஓங்குமரன் மேலிருக்க உற்றழகு தாங்கும் நவிரம் (மலை) நீ. நெய்யும் நறும் வூவுமின்றித் தவிராதழகு தழைக்கின்ற கூந்தலே! அவிரும் *சிகாவளமே! ஆண்மை சிதையாச் சிகண்டியே! சிகண்டி-பேடி) சுகாரம்பமா மினிய தோகாய்! சேர்ந்தாரைக் கொல்லாது. தீப்புகையும் மேவாது, சார்ந்தாரைக் காத்தளிக்கும் தண் சிகியே! (சிகி-நெருப்பு; சிகியை யுடையது சிகி.) நரம்புக்கட்டில் அடங்காத கேதாரமே! (பண்) வேலின் மின்னல் எழ, சேவலின் இடி யோரை முழங்க, இதயமாகிய வானத்திலே, கந்தனாகிய மேகம், உரிய காலத்திலே பெய்வதனால் பல்லுயிராகிய பயிர்கள், தழைவதற்கு ஆதாரமாகிய கேதாரமே! (கேதாரம்-பண், வயல்; மயில்.) இரங்கத் தகுந்த நான் தேடுகின்ற பெருந்துணையே!

## ஏனையதூதுக் கிவையிவை குறையெனல்

தூதுக்கேற்ற நெஞ்சத்தைத் தூதுவிட வெனில், அது வஞ்சத்தில் தோர்ந்தது. முருகன்பால் கொஞ்சத்தில் சேராது. சேர்ந்தாலும் என் நிலைமையை ஓர்ந்து உரையாது.

---

* மயிலுக் கமைந்த வேறு பெயர்களான சிகாவளம், சிகண்டி, சிகி, கேதாரம் முதலியன பல பொருள் ஒரு சொல் என்பதை ஆசிரியர் கவியரசு கு. நடேச கவுண்டரவர்கள் விளக்கும் முறை பக்தர்கள் உள்ளத்தைப் பரவசப்படுத்துமென்பது துணிபு.

அன்றியும், கந்தன் உருவைக்காணில், கரைந்து, அழிந்து தன் நிலையை கெட்டு' மறந்து, என் குறையைச் சொல்லாது. முன்பு பல தடவை சொல்லியும் கேளாமல், அப்பணியைக் கைவிட்டது. பேய்போன்ற ஐம்பொறிகளின் மயக்கால் வலிமையிழந்து, புன்செயலிற் பொழுது போக்கிற்று.

*அன்றிலினை ஏவுவோம் எனில், அது தன் பெயர் கொண்ட மலையை முருகன் எறிந்தான் என்பதை அறிந்து அஞ்சாதோ? அன்றியும் அது புல் இனத்தைச் சேர்ந்து புணர்ச்சிக்கே உள்ளழிவது. ஆண்டவன் முன் செலுத்தத் தக்கதன்று.

அன்னத்தை ஏவுவோம் எனில், தன்னையுடைய பிரமன், முன்பு முருகனாற் சிறைப்பட்டதை நினைத்து அவன் திருமுன் செல்லாது; அன்றியும் அவ்வெள்ளையோ பெருமான் முன் சென்றுணர்ந்து பேசாது.

கிளியை அனுப்பலாம் என்றால் 'பூசை' எனக்கேட்டால் உயிர்விடும் இயல்புடையது. (பூசை—பூனை) பூசை மிகுந்த கோயிலினுள் அது எவ்வாறு செல்லும்? தெள்ளுதமிழ் வண்ணப் பாவில் வல்ல கிளியை, (அருணகிரிநாதரை) இறைவன் மலர்க்கையில் கண்டு, அதன்முன் நண்ணுவதற்கு நாணாதோ? மேலும் செல்லும் வழியில் அது பல தத்தை (கண்டம்) அடையும்; திரும்பி வருவது அரிது. அதனால் கிள்ளையை (கிளி) தத்தை என்றழைப்பர்.

---

* சிகையின் வள மிகுந்தது சிகாவளம்; சிகை—கூந்தல்.

** அன்றிற் பறவையை 'கிரவுஞ்சபக்ஷி' என்று வடமொழியில் சொல்லுவார்கள். ஆணும் பெண்ணும் எப்பொழுதும் இணையாகத் தானிருக்கும். பெரும்பாலும் பனைமரத்தில் வாசம் செய்யும் திருப்பனந்தாளில் இன்றும் இப்பறவைகளின் இனத்தை மிகுதியாகக் காணலாம்.

நாகணவாய் (பூவை) தன்னைவிடின், அது பாகு போன்ற சொல்லுடைய பாவையர் கையில் பட்டுவிடுமே.

புறாவை விடுவோமெனில், அதுவோ தூதையே (கல்) உண்பது. காரியத்தில் தீது விளைவிக்கும்; அன்றியும் அது கபோதி. (கபோதம்–புறா).

குயிலைப் போக்குவோம் எனில், தாயும் செவிலியும் கேட்டுப் பொறுக்க முடியாத அதன் கூக்குரலை யார்தான் கேட்டு மகிழ்வார்? அன்றியும் சிவபெருமானால் முனியப் பட்டு, உடம்புபின்னப்பட்ட மன்மதன்முன் பிடிபட்டு, சின்னப் பட்டு முருகனது சினத்திற் பட்ட மாமரத்திலே பின்னப்பட்ட அக்குயில், ஆண்டவன் முன் போய்ப் பேசுவது எங்ஙனம்?

வண்டினையும், மானினையும் வள்ளற்பால் செல்க வெனின், அவை வேங்கையுரு ஆனவன் முன் செல்பவோ?

தமிழையும், பொன்னையும் செப்பி விடுவோம் என்றால், அவற்றின் உரையையும் பிறரே சொல்ல வேண்டி யிருக்கின்றது. (உரை–பொருள் ; மதிப்பு). அன்றியும் அவை பல பந்தப் படலும் உடையவை. எம் உரையை அவை எவ்வாறு இயம்பும்? அவை சந்தம் உடையவை ஆயினும், பல வேற்றுமையும், அல் வழியும் திரிபும் உடையனவே.

தென்றலோ என்றால், உன் எச்சிலாகிய பாம்பின் வாய் எச்சில் அது.

(மயிலின்) வாயில் பாம்பு இருக்கின்றது. பாம்பு காற்றைப் பருகும்). ஆதலின் நாயகன் முன் அதனை உய்த்தல் நன்றன்று).

மேகத்தைத் தூண்டுவோம் எனில், அது இடிக் குரலும், உடற்கருப்பும், வாய் திறந்தால் நெருப்புக் கக்குதலும் உடையது. காலம் அறியாதது.

விறலியைத் தூது விடுவோம் எனில், கள்ளும்' ஊனும் விரும்பி யுண்ணும் பேதையரை வள்ளல்பால் விடுதல் மாண்பன்று. *இவையெல்லாம் தூதுக்குத் தக்கவையல்ல.

## மயிலின் தூதே வாய்ப்புடைத்து என்றல்

தூதுவருக்கு இன்றியமையாதனவாகிய திடம், அறிவு, கண்ணோட்டம், அழகு, திறமை இவை போன்றன எல்லாம் மயிலே! உன்பால் கூடியுள்ளன. முருகன் உன்மேல் ஏறி அமரும் குறிப்பு, ஏவும் சொல்லின் குறிப்பு, அவன் திருவடி அவ்வப்போது உன்மேல் பொருந்தும் நிலைமை முதலிய இவை போன்றவை யறிந்து, அவன் திருஉள்ளத்துக்கு ஏற்றபடி நடக்கும் இயல்புடையை நீ. குமரனும் உன்னுடைய குறிப்பை யறிந்து அருள்வான். இறைவன் தயவினும் அடியார் தயவே சிறந்ததென்று கூறுவர்.

## அண்டர்கோன் மயிலின் திண்டிறன் மாண்பு

மயிலே உன் பெருமை நீ அறியாய். தம் பெருமையைத் தாமே யறியார் சான்றோர். மண்ணிலே, விண்ணிலே பாதாளத்திலே வாழ்கின்றவர்களில் உன் புகழை வாழ்த்தாதவர்கள் யார்?

---

* ஏனைய தூதுக்கிவையிவை குறையென எடுத்தியம்பும் பகுதி, ஆசிரியரவர்களின் சீரிய புலமையையும் தெள்ளிய உள்ளத்தையும் சமய ஆராய்ச்சித் திறனையும், விவகார சமத்காரத்தையும் 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல் விளக்குவதை வாசகர்கள் கண்ணுறுவார் களென்பது ஒரு தலை.

உன் தோகை விரிந்தால் உலக முழுவதற்கும் நிழல் தருமே! நீ அகவி, உன் தோகையை உதறினால், உண்டாகும் காற்றின் வேகத்தால் இமயமலையும் வேர் பறியும். விண்ணிலுள்ள அண்டங்கள் அத்தனையும், முட்டை போல் உன் சிறகிற்குள் அடக்கும் ஆற்றலுளாய், ஆதிசேடனை நீ பற்றிப் பதைக்க உதறியதால், அவன் தலையிலிருந்த மணிகள் விண்ணிற் சிதறின. அவை விண்மீன் வடிவு கொண்டு, இன்னும் ஆகாயத்திலே நிற்கின்றன. ஏனெனில், அவை கீழே வந்தால் அவற்றைச் சோளமணிகள் என்று நீ கொத்தி உட்கொள்வாய் என்று அஞ்சியே தான். ஈசனது வில்லாகிய மேருமலையில் பூட்டிருந்த வாசுகியாகிய நாணின் தலையை நீ பொள்ளெனக் கொத்தியதால் நாணறுந்து அவ்வில் தலை நிமிர்ந்து நிற்கின்றது. உன் சிறகுக் காற்றுக்கு ஆற்றாது ஆதிசேடன் தலையை நெளிப்பதனால் பூமி அசைவதையே பூகம்பம் என்று சொல்லுவார்கள். சூரிய சந்திரர்களைத் துன்புறுத்தும்படி தொடரும் அரவங்கள். உன் பெயரைக் கூறக் கேட்ட மாத்திரத்தில் தொடர்வதை விட்டு, புற்றிற் புகும். தனது பாயான ஆதிசேடனை நீ கொத்திச் சென்றதினால் அன்றோ திருமால் ஆலிலையிற் பள்ளிகொண்டான். ஆலால விஷத்தைக் கண்டத்துள் வைத்தருளும் கண்ணுதலார் செஞ் சடை மேலிருக்கும் துணிச்சலால், அரவங்கள் கர்வங் கொண்டு, அண்டத்தே ஏகும் கருடனைக் கண்டு, "ஏண்டா, கருடா சுகமா" என்றழைக் குமே! ஆனால் வேகமிகு தோகையே! நீ நெடிய தூரம் வரக்கண் டாலும், போகுமே வெண்டலையின் பொந்தினுள்ளே; கருடன் நின்னாற் புடைப்புண்டு நெக்கழுத காரணத்தால் அன்றோ, 'கலுழன்' எனப்பெயர் பெற்றான். மலரோன் வாகனமாகிய

அன்னம் உன்னைக் கண்டு அஞ்சியதனால் 'அஞ்சம்' எனப் பெயர் பெற்றது என்றால், உன்னுடைய ஆற்றல் எவருடைய சொல்லில் அடங்கும்!

## மணி நிற மயிலின் அணிநடம் புகழ்தல்

வட்டவடிவாக வளைந்து நீ ஆடுங்கால், உன் கட்டழகுக்குக் கரையாதார் யார்? நீல முகிலாகிய திரையை இறக்கி நீ நடிக்கின்ற அழகு கண்டு தம் உள்ளம் நெகிழ்ந் தமையால் தேவர்கள் வடிக்கின்ற கண்ணீரையே உலகோர் மழை எனக்கூறுவர். நடராசர்தான் உனக்கு நடனத்தில் ஒப்பாவார். மகளிர், உன்போல் நட.மாட விரும்பிப் பல காலமாகப் பயின்றும், அவ்வாறு ஆட வல்லமை யில்லாமையால் மெல்லியர் என இகழப் பெற்றனர். காளி நடமாட முயன்றும், ஒரு கால் எடுக்க மாட்டாமல் சபையிலே முகங் கவிழ்ந்து நின்றாள். பார்வதியும் பொன்னம்பலம் ஏறினும், தான் நடம் ஆட மாட்டாமல் இறைவன் நடத்தையே கும்பிட்டு நின்றாள். திருமகள் வீடுகள் தோறும் மாறிமாறி நடம் ஆடுதல் செய்தும் 'செய்யாள்' எனும் பெயரே சேர்ந்தாள். கலைமகள் உன்போல் நடமாட முடியாமல் அன்னத்தைப் போல் உடல் வெளுத்தாள். உன்னுடைய நடையைப் பயின்றும், கைகூடாமையால் அரம்பை இடையிலே இளைத்துப்போனாள். முருகனை நீ தாங்கி விளங்குகின்ற மேம்பாடு கண்டு, அதுபோல் ஆக வேண்டுமென்று, கடல், நாள் தோறும், காலையிலும், மாலையிலும் கதிரவனைத் தாங்கியும், உனக்கு ஒப்பு ஆகாமல் உடல் வெதுப்புற்றுப் புலம்பும் உன் சாயலை விரும்பிய மாதர், அது எய்தப் பெறாமல், பேதையர் என்று இகழத்தான் பெற்றனர்.

## கண்ணெழின் மயிலின் புண்ணியப் பெருமை

மேதைமிகு மயிலே! எந்த யோகியர் உன்போல் தவம் உடையர்? இமய வல்லியும், உருவம் கொண்டு தவம் இயற்றியே சங்கரனார் பங்கில் உறையும் பேறு பெற்றர். உன்போல் வடிவம், உன்னுடைய பெயரும், மலைகள் உடையன. (நவிரம்–மலை, மயில்.) அதனால்தான் குமரன், குன்றமெலாங் கோயிலாகக் கொண்டான். உனையன்றி, அவனுக்கு (முருகனுக்கு) இனியார் யார்? அவனுக்கு அருவிக் குன்றம்போல் யானையும், தகரும், தேரும் போன்ற வாகனங்கள் மிக்கிருந்தும், அடியார்க்கு அருள் செய அவன் வரும் வேளையில் உன்மேல் ஏறியன்றோ கையில் வடிவேல் விளங்க வருகின்றான். "வேலும் மயிலும்" எனுஞ் சொற்கிணையான மந்திரந்தானுண்டோ? பணிவோடு முருகன் பெயரை மறந்தாலும் உன் பெயரை மறவார்கள் வாழ விரும்புவோர். அருணகிரியார் பாடிய கந்தரனுபூதியிலே "ஆடும் பரிவேல் அணிசேவ லெனப் பாடும் பணியா அருள்வாய்" என்பதில், உன் மகிமைதானே முன்னர் வாய்த்துளது. அந்த அருணகிரிநாதர் உன்பெயரை ஓதியதாலன்றோ உருவாய், அருள்வாய், உளதாய், இலதான கந்தன் குருவாகி வந்து, அவருடைய மூவாசைத் தொடரறுத் துப்பின் அவருக்கு அநுபூதியருளியது. உன் பெயரை, நானுள்ளுருகி ஓதுவதால், என் குறைக்கு நீ இரங்கி, முருகப் பெருமானிடம் நீ தூது சென்று வரல் வேண்டும்.

## பணிபவர்க் கருளல் அணிமயிலியல்பு.

அடைந்தோரை ஆதரித்தல் உன்னுடைய இயல் பன்றோ? அருணகிரி நாதருக்கு வந்த இடையூறு நீங்க,

அரசன் சபைமுன் (பிரபுட தேவ மகராஜன்) தக்க சமயத்தில் முருகப் பெருமானைக் கொண்டு வந்து புகழ் படைத்த தாளாளன் நீயன்றோ? "கொண்டு வா இங்கு குமார கம்பீரனை" யென்று தண்டமிழில் கேட்டவண்ணம் சாதித்துக் கண்தெரியா முத்து வயிரவப் புலவருக்குக் கண் தெரியக் காட்சி கொடுத்தவன் நீயல்லவா? முருகப்பெருமான் உன் வேண்டுகோளை மறுக்கமாட்டான். இதனை அனைவரும் அறிவர். தானே தயவுடைய சண்முகனிடத்தில் உன்போன்ற அன்பர்களும், என் குறையை விண்ணப்பித்தால் அருள் செயேன் என்பானோ? அடியாரைத் தத்தளிக்கவிடச் சகிப்பானோ? மாயையின் மகனாகிய சூரனுக்கும், தன் பேருருவைக் காட்டியவன், நேயருக்குக் காட்சி நல்கானோ? மாயைக் கொடுமைகளைக் களையவல்ல இறைவன் என்பாசக்களையையும் களைய வல்லவன் அல்லனோ? வீரம் பேசி இகழும் புலவர் பாலும், துன்புறுத்தி இன்கவி கொள்ளுமவன், அன்போடு யான் பாடும் தமிழ் மாலைகளையும் இன்போடு தன் தோளில் ஏலானோ? "குழறிக் குழறிக் குமரனைப் பாடு" என்கிற பழமொழியுங் காயாவது தகுமோ? நீ கூறினால், முருகன் என்னையும் தள்ளாது ஏற்றுக் கொள்ளுவான். இதில் ஐயம் கொள்ளேல். அவன் முன்னர் நீ உருவக தாளத்தில் ஆடினால் அவன் உருவை அகத்தில் நான் உன்னுவதை உணர்வான். ஆதி தாளத்தில் ஆடினால், நீ துணையாதி என நான் வேண்டுவதை அறிவான். சம்பை தாளத்தில் ஆடினால் நான் சனனப்பையில் வராதபடி அருளுவான். திரிபுடை தாளத்தில் ஆடினால், மாயையால் வருந் திரிபு உடைய அருள் செய்வான். மட்டிம தாளத்தில் ஆடினால்,

மட்டிமையை நீக்கிய சிட்டர் குழுவிலே சேர்ப்பான். துருவ தாளத்தில் ஆடினால், குருவாகி வந்து, தொல்லைவினை தீர்த்துப் பெரிய நிலையில் வைத்து ஆதரித்து எம்மைவாழ் விப்பான். ஆதலால் நீ முதலில் சண்முகன் முன் சந்தமொடு நடித்து அவனை மகிழ்வித்து, நல்ல சமயம் வாய்த்து, என் குறையை வித்தகமாய் விளம்புக.

## நன்றி மறவேனெனத் தொண்டன் நவிலல்

அவ்வாறு விளம்பினால், சிவந்த சிறிய காலையும், விரிந்த பசிய தோகையும் உடைய மயிலேறே! இவ் உதவியை என்றும் என் நெஞ்சில் நன்றாய் நினைவேன். சமயத்தில் உயிருதவி செய்தவர்களை, உயிர் உள்ளளவும் போற்றுவது மேலோர் மரபு. உன்னைப் புகழ்ந்து, அண்ணாமலைப் புலவர் (அருணகிரிநாதர்) பாடியருளிய மயில்விருத்தம் பாடுவேன். ''ஆதவனும் அம்புலியும்' என்ற திருவகுப்புப் பாடி மகிழ்ந்தாடுவேன் ''வண்ணச் சரபம்'' முருகதாசர் சொன்ன மயிலலங்காரம் சொல்லி, மனமுருகி உன்னைப் புகழ்வேன். பரிபூரணானந்த போதம் பகர்ந்த பரபூரணானந்தக் கடல் போன்றவரும், தகராலய இரகசியம் சொன்ன முழு ஞானியும், முருகனுக்கே தம் உள்ளத்தைப் பறிகொடுத்தவரும், அகவிருளை நீக்கும் சித்தாந்த பானுவுமாகிய குமரகுருதாசர் (பாம்பன் சுவாமிகள்) உன்னைப் புகழ்ந்து கூறியதும், தீந்தமிழ்ச் சால நிறைந்ததுவும், "கன்மனமும் நீராக்கும் கற்கண்டினைப் பழிக்கும்" *பொன்மயிலின் கண்ணி சொலிப் போற்றுவேன் "கன்மவினைக் கட்டறுக்கும் ஞானக் கதிர்வேற் பெருமாற் குத் திட்டமுற என் கருத்தைச் செப்புவாய்." பல்லுயிர்க்கும் நல்லுயிராயிருக்கும் அப்பரம் பொருளுக்கு யான்விரித்துச்

சொல்லுவது என்ன? என் உள்ளத்திலிருந்தும், தன்னை ஒளித்த பெருங்கள்வனுக்கு அறிவிலேன் சொல்லுவது யாது?

## தொண்டன் தன் குறைசொல்லி விடுத்தல்

எனினும், வாழையடி வாழையாக, உனக்கு வழியடிமை செய்யம் ஏழைத் தொழும்பன் ஒருவனுளன். அறியாமையால் அவன் பிற குற்றம் ஒரு கோடி செய்தாலும், உன் திருவடிக்கு ஒரு குற்றமும் செய்ய நினையான்.

"உன்னை யொழிய வொருவரையும் நமபுகிலான். பின்னை யொருவரையும் பின் செல்லான். உன்னடியார் பொன்னடிகட் கென்றும் பிழை செய்யான். அன்னவர்கள் சொன்ன பணிபுரியச் சோர்வடையான்." பரம்பொருளும், பல்லுயிரும், இருவினையும், அவற்றிற் கேற்ற கதி வகைகளும் இல்லை என்பார் கூட்டத்தில் கால்வைக்க மாட்டான், சரியை முதலியவற்றை இகழும் குறும்பர்கள் கூட்டத்தைக் கூடான், மனையை, பொன்னை, மணியினை, பெண்கள் கூட்டுறவை, சோற்றை, துணியை, அணிகலனை எனதென தென்று தேடித்திரிந்து திரட்டிச் சேர்த்துவைத்து அலைகின்ற சிலர், "தாம்பிரமம்" என்று மார்தட்டி

---

தேவாதி தேவன் சிவஞான தேசிகனை
வாவென் றழைத்துவர மாட்டாயோ பொன்மயிலே
வேலைப் பிடித்த செங்கை வேந்தை யழைக்க உன்றன்
காலைப் பிடித்தேனென் காதலாற் பொன்மயிலே
ஒப்பில் பரவெளியி லுள்ள பரசிவத்தைத்
துப்புநவின் றிங்கழைக்கத் தூதுபோ பொன்மயிலே.

(பாம்பன் சுவாமிகள்)

கொள்வார்; அக்கேடர் குழுக் கொள்ளான்.

"ஏகம், துவிதம்" என்று வாது செய்வாரோடு இணங்கான். பொய்ஞ்ஞானம் பேசுவோரை விரும்பான். வஞ்சனையால் தன்னை மறைத்த ஆணவ இருளும், வினைத்தளையும் நீங்கி, மாயைப் பேயைத் துரத்தி, பேசா அநுபூதி பொருந்தப் பெரிதும் விரும்பினான். "நீயான ஞானவிநோத நலமே விரும்பினான். அவனது குறை தவிர்த்தாளல் உன் கடன் காண்.

எளியார்மேல் மிகுந்த கருணை உடையோனே! அவ்வடியான்பாலுள்ள எத்தீங்கையும் ஒரு பொருட்டாகக் கருதேல். "இங்கே வா! நீ என் அடிமை" என்று சொல்லி அவனை ஆட்கொண்டு உன் பொன்னடிகளை அவன் சென்னிக்குப் பூவாக ஆக்குக. பழவினைக் குற்றம் நீக்குக. மெய்ஞ்ஞானம் ஆக்குக. எனது, யான் என்னும் செருக்கைக் களைக. உன்னையே உணர்ந்துணர்ந்து தந்துவமெல்லாம் ஒடுங்கி, மெய்யின்பம் புணர்ந்து அதினின்று நீங்காமல், தாடலைபோல் நீங்காத சுத்தாத்துவித அனுபவத்தில் நிலைநிறுத்துக; பொன், மாடு, மனை, மக்கள் முதலிய வற்றிலும், ஏனைய வாழ்விலும் மயங்காமலும், கேடு விளைவிக்கும் வறுமை அவனை அணுகாமலும், காமக் குழியில் வீழ்ந்து ஆழாமலும் தீந்தமிழ்ப் பாவினை விற்றுத் திரியாமலும், உனது புகழ் கூறும் நூலன்றிப் புன்னூல் ஓதிப் பொழுது போக்காமலும், அன்புமிக்க ஜெபம் திருவடித் தியானம் முதலாகிய நலங்களை எல்லாம் விரைவிற் பெறவும், நீ வந்து வரமருளி, எல்லையில்லாப் பேரானந்த வீடும் அவனுக்கு அருள்புரிக. "ஆனந்த உருவனாகிய

முருகையனே! சத்தே! சித்தே! ஓம் சதாசிவனே!" என்று சொல்லி சித்தேசனுடைய நல்லருளை எனக்குச் சேர்ப்பிக்க. தோகைக் குடையை விரித்து நிழல் பரப்பி, வள்ளி தெய்வயானை ஆகிய அன்னையர்கள் இரு பக்கத்திலும் பொருந்த, வெற்றிமாலை புனைந்த ஞானவடிவேல், வலக்கையிலே ஏந்திய முருகேசனை, ஞானப்பால் பரிமளிக்கும் வாயனை, பரம குருநாதனை, தேவர்கோவை, வரதனை அன்பரை வாழச்செய்யும் விரதனை, மாணிக்க வண்ணனை, பவளத்திரளை, ஆணிப் பொன்னை, பெருஞ்சோதியை, அடியார்களின் பிறப்பிறப்புக் கடல் கடக்க அருளும் தோணியை, முத்தியின்பம் துய்க்க ஏற்றும் ஏணியை, அன்பர்க்கு இரு நிதியை, ஆரமுதை, முக்கட் கரும்பில் எழுந்த இனிய சாற்றினை, வேத மரத்தில் விளைந்த நறுந்தேனை, மெய்ஞ்ஞானத் தீங்கனியை, ஒளி பொருந்திய அயில்வே லேந்திய அருள் நிறைந்த பழநி ஆண்டவனை, என்பால் மயிலே! விரைவில் அழைத்து வருக.

(உரைநடை முற்றிற்று.)

உ

குருவே துணை.

# சாத்துகவிகள்

சிரவணபுரம் கௌமார மடாலயம்
ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் மாணாக்கர்

ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள் இயற்றியன.

## கட்டளைக் கலித்துறைகள்.

திருவாவி நன்குடி ஞைச்சிறப் புற்ற தலமலையு
ளொருவாவி னன்குடி யேற்றடி யாருள் ளுணர்வமையக்
குருவாவி னன்குடி லைத்தணந் தென்குடி லைப்பொருள் செய்
திருவாவி னன்குடி ஞானப் பழனிச் சிவகிரியே (1)

தலச்சிறப் பாரிசைத் தீர்த்தச் சிறப்புந் தலைமையருள்
நலச்சிறப் பாமுயற் மூர்த்திச் சிறப்பு நனியடைந்தோர்
புலச்சிறப் பார வருள்வினை யாடற் புதுமை கொண்மங்
கலச்சிறப் பும்புரி யுந்தண்ட பாணிக் கடவுணன்கே (2)

எந்தக் கடவுட்கு மேலாம் விநாயக னென்னுமொற்றைத்
தந்தக் கடவுட் கொருதுணை யாகித் தழைத்திசையெங்
கந்தக்கடவுட் கிசைதூ தெனத்தொண்டர் காண்டாக்கண்
முந்தக் கடவுட் டுணைமயிலாக முயன்றனனே (3)

மண்முத னாதத் தொனியீற தாக வகுப்பவெல்லாங்
கொண்முத லாகிக் குருமுத லாகுங் குமரனுள்ளத்
தெண்முத லாகி யழகென்ன வோது மினமுதலாய்ப்
புண்முத லாகு மயிற்குமெய்த் தூது பொருந்துநன்றே (4)

ஒருபத்தெட்டுத்தொகைப் பாடைக்குண் மாட்சி யுறுதமிழால்
இருபத்தெட்டுத்துறை யாகமத் தின்றொகை யெய்தவன்பு
நிருபத்தெட் டுத்தமர் தாம்பெற்ற வின்ப நிறைவமையுஞ்
சொருபத்தெட் டும்படி கூட்டப் பரிவிற றுதித்தனனே (5)

தீதுக் குருவந் தனையர்க்குத் துன்பஞ்செய் யாதுமலை
மாதுக் குருவந் தனையளித் தானன்பு மன்னுதவச்
சாதுக் குருவந் தனைவழி பாடு தவாதுமனப்
போதுக் குருவந் தனையான்மெய்க் காட்சி பொருந்துநனே (6)

ஏராள னான தொழிற்சிறப் பாற்கல்வி யேற்றமுற்ற
ஏராள னான வியல்பமைந் தானிகத் தின்மிசையாங்
காராள னானமெய் யேற்றன்மெய் யாகக் கவிவகைபெய்
காராள னான தகைமையுஞ் சாலக் கஞுலினனே (7)

வேளாள னாகுங் குலக்குணத் தைக்கை விடேனெனச்செவ்
வேளாள னாகும் பிடிவாத முற்றினன் மெய்மையின்பத்
தாளாள னாகு நலத்தாலங் கொத்திங்கு தங்கிடச் சேய்
தாளாள னாகுந் தவப்பயன் வேட்கைத் தழைப்பினனே

இத்தன்மை வாய்த்தவன் யாரென்னி லென்னதன் பேற்றமையுஞ்
சித்தன்மை யார்பொழிற் கோவைப் பதியன் சிறப்படியார்
பத்தன்மை யற்கட னீந்திடப் பாடிப் பரவுதெய்வத்
தொத்தன்மைந் தார்மனச் சுத்தன்நடேசனந்தோன்றலனே

முன்னம் பலபிர பந்தஞ்செய் தான்சீர் முதிர்ச்சியுற
வின்னம் பலபல செய்தே யிகத்தி லிசைபெருக்கிக்
குன்னம் பலமுற் றுறத்தெளிந் தேயின்பக் கூத்திசைக்கும்
பொன்னம் பலசக்தி தோயவன் னோன்பதம் போற்றுதுமே

---------

கோ.தா.செட்டிபாளையம் சித்திர கவி
ஆர்.என். கலியாணசுந்தர கவுண்டர் அவர்கள் இயற்றியது.

## வெண்பா.

பச்சைமயில் தூதொன்று பாரோர் புகழும்வகை
செச்சையணி வேலவனார் சேவடிக்கே–இச்சைகொளும்
கோவை நடேசகவிக் குஞ்சரஞ் செய் தானன்பாய்
நாவைவிடாத் தேனூர நன்கு.

---

கோவை–கணபதி

## க.கி. குமாரசிவம் பாடியவை.

மீதாட்டி னிவர்ந்தருளி வினையேமைக் குணங்கொண்டு
கோதாட்டி யாள்பழனிக் கோமான்பொற் கழற்குமயில்
தூதாட்டி னறுஞ்சாறுந் துவர்க்கமிகச் செய்தளித்தான்
மாதாட்டி கப்புலமை மன்னிய நடேசனரோ. (1)

நொடிக்கொருநூ றாக்கவிகள் நுவலவலான் அம்பலத்துள்
நடிக்குமரன் பேர்வினவில் நயனநீர் குதிக்கமயிர்
பொடிக்குமரும் பத்தியுளான் புலவரெலாம் புகழெட்டி
குடிக்கமரற் கொருபிள்ளைக் கொழும்பாவுங் கூறியுளான்.

வாக்கினால் வல்லகழு மலநகர்ச்சேய் தாளெண்ணித்
தேக்கினான் தமிழுண்டு திருவெம்பா வைக்குரையுஞ்
சேக்கிழார் தம்பிள்ளைச் செழுந்தமிழுக் குரையுநமக்
காக்கினான் அருமைபெற அறிஞர்புகழ் கவியரசே. (3)

அப்பைய தீக்ஷதர்சொல் ஆன்மசமர்ப் பணநூற்குந்
திப்பியநற் சங்கரர் சிவானந்த லகரிக்கும்
ஒப்பைய இவனிலேயென் றுரைக்கமொழி பெயர்த்திட்டெஞ்
சுப்பையன் பால்மயிலைத் தூதுவிட்டான் வாழியவே. (4)

---

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# பழனியாண்டவர்
# மயில்விடு தூது

## காப்பு - விநாயகர்

அளிபயிலுந் தென்பழனி யாண்டவனை வேண்டிக்
களிமயில்சேர் தூதுக்குக் காப்பாம்–தெளிநறுந்தேன்
தேங்குஞ் சரத்தாமச் செஞ்சடைமுக் கட்கருணை
ஓங்குஞ் சரத்தா னுவந்து.

## சற்குருநாதர் வணக்கம்

தஞ்சமென வஞ்சலெனுஞ் சாதுகுரு நாதனிரு
செஞ்சரண நெஞ்சதனில் சேர்தலினால்––விஞ்சும்
அயில்விடலை தென்பழனி யாண்டவன்பா லன்பாய்
மயில்விடுதூ தாகு மகிழ்ந்து.

## வித்யாகுரு துதி

கந்தச் சுவாமி கருணா கரச்சாமி
சந்தச் சுவாமிதமப் பச்சாமி–மந்தத்
துயில்விடு மாறருளுந் தூயகழல் போற்ற
மயில்விடு தூது வரும்.

# நூல்

## கலிவெண்பா

### சுப்பிரமணியன் ஒப்பறு பெருமை

பூமேவு மாது புணரும் புயல்வணனு
நாமேவு மாதுபுணர் நாயகனும் – கோமேவும்
யாக்கைத்தே வேந்திரனும் இன்னிசைய நான்மறையும்
ஆக்கத்தே வாதியர்கள் யாவர்களும் – நோக்கி
யறிதற் கரிய வநாதியா யாதோர்
குறியுங் குணமுமிலாக் கோமான் – நெறியால்
அறிவை யறியு மறிவ ரகத்துட்
செறியும் பரம சிவமாய் – அறியும்
அறிவி னறிவாகி யவ்வறிவி லூறும்
பிறிவருபே ரின்பப் பெருக்காய் – தெருமுமல
நோய்நீங்கி யாருயிர்கள் நோன்மையுற நோன்றெடுத்த
தாய்போல வைத்த தயாவினால் – ஏயும்
உருவு மருவு முருவருவு மாகப்
பருவ வடிவங்கொள் பண்பான் – மருவு
முலகுயிர்கள் யாவுமாய் வேறா யுடனாய்க்
கலவிக் கலவாத காட்சி – யிலகும்
அவனருளால் அல்லாமல் ஆர்க்கு மெவைக்கு
மிவனின்ன னென்னவொண்ணா ஏந்தல் – நவையறுமா
றெப்பிரமா ணத்தாலு மெச்சமய மும்பரவு
கப்பிரமண் யப்பெயர்சேர் தொன்மையான்–எப்போதும்
ஏசுத லில்லாப் பிரமம்இது வென்றுமறை
பேசுஞ் சிவசுப் பிரமணியன் – தேசமெலாம்
ஆக்கி அளித்தழிக்கு மாற்றலவர் போற்றுபுகழ்
தூக்குஞ் சதாசிவவோஞ் சுப்ரமண்யன் – ஆக்காத

ஆக்கை யிளமை யழியாத தெய்வமணம்
பூக்கும் அழியாப் புகழ்முருகன் – தேக்கரும்பர்
எண்ணா யிரங்கோடி யீண்டிடினுங் காலழகு
நண்ணா வெழின்மிகுந்த நன்முருகன் – எண்ணாமல்
ஓங்காரத் தின்பொருளை யோதாத வேதாவைத்
தாங்காச் சிறைவைத்த தாடாளன் – பூங்காலிற் 15

றெண்டனிடு தந்தைக்குச் செம்பொருளைச் செப்பியாட்
கொண்டபரம குருசாமி – விண்டுவையோர்
கையாற் குறுக்குங் கலசமுனிக் கின்னருளைப்
பொய்யா தளித்த புகழ்ச்சாமி – வையமெலாம்
தன்னுடைமை யாகத் தனையுடையார் வேறில்லாக்
கொன்னுடைய சாமி குகசாமி – முன்னர்மதன்
வெந்ததுநன் றென்றுள் வியக்கவவற் குற்சிதஞ்செய்
அந்த மிகுங்குமர னாஞ்சாமி – பந்தமலக்
குற்சிதங்கள் போக்குங் குமாரபர மேசனுயிர்
நற்குகையில் மேயகுக நாயகன் – சிற்பொருள்கள் 20
அத்தனைக்குந் தம்பெருமா னாளுஞ்சே னாபதிபோர்
எத்தனையோ கோடி இசையியவுள் – பத்தித்

## அறுமுகபரமன் அமர்படை வீடுகள்

தரங்குன்ற லில்லார்க்குச் சன்மவிடாய் தீர்க்கும்
பரங்குன் றொடுஞ்செம் பவளம் – தரளமொடு
நந்தூ ரலைவாயில் நண்ணி முழுங்குதிருச்
செந்தூ ரலைவாயுஞ் சித்தர்குழாம் – வந்தித்
தொருவாவி னங்குடிலி லுய்க்காது காவென்
திருவாவி னன்குடியும் தெய்வத் – திருமறையோர்
நீரகத்தா லாறெழுத்து நெஞ்சழுத்தி யஞ்சலிசெய்
ஏரகமும் பூம்புனந்தோ றேனல்விளை – நீரருவி 25

முன்றிறொறு மோடி யொளிர் முத்திறைக்குந் தண்சாரற்
குன்றுதொறுஞ் சூனிறைந்து கொண்டலினம் – துன்றி
முழமுதிரு மோசை முழங்கமயி லாடும்
பழமுதிருஞ் சோலையும் பல்சீர் – விழவுமலி
நன்னகரம் இன்னும் பலவு நயந்திருந்து
மன்னுயிர்கட் கின்பம் வழங்குகினு – மின்னும்

## பழனி மலையின் பலபெருஞ் சிறப்புக்கள்

முடியுடைய வேந்தரொரு மூவரினு முன்னாம்
தொடியுடைய தோட்சேரர்–தோன்றல்–கடிபொழில்சூழ்
தில்லைசிற் றம்பலத்துள் தேவர்பிரான் காற்சிலம்பின்
மல்லலொலி யார்ந்துமகிழ் வார்செவியான்–தொல்லுயிர்கள்
உள்ளங் கழறியவை யுள்ளபடி நன்குணர்ந்து
தெள்ளிமனு நீதிசெயுஞ் செங்கோலான்–வள்ளல்
முதலைவாய்ப் பாலனுயிர் மீட்டமுனைப் பாடி
முதலைவாய்ப் பன்பாக்கி மூவா – முதலார்வாழ்
அண்ணற் கயிலைக்கவ் வாரூர ரோடாடற்
பண்ணற் பரிமேற் படர்ந்துசுவை – உண்ணமுதல்
தெய்வவுலா வோதுபுகழ்ச் ரேச னணிகொங்கில்
நய்தலிலா வைகாவூர் நாடதனில் – சய்யம்வளர்
மாதிவ ராக மலைவில்லி வாழ்நெடிய
ஆதிவ ராகமலைக் கண்ணிதாய்ச் – சோதிமிக 35
வோங்குபசும் பொற்கிண்ண மொத்தமலர் மெத்தமலர்
கோங்குவனம் பச்சைக் கொடியுமையாள் – பாங்கிலுறை
தாவிளஞ்சே வேறி தனைநோக்கி நோற்றநறுங்
கூவிளஞ்சேர் தண்காடு கொண்டல்வணன்–மேவியெனைத்
தண்டு ளவத் தார்மாற்பிற் றாங்குகவென் றோங்குமவாக்
கொண்டுதிரு நோற்ற குளிர்பொழிலும் – அண்டருண

நல்லினிய வுண்டிவகை நல்குமெழிற் றேனுவுடன்
எல்லியவுள் நோற்றசுவை யேற்றமிகு – நெல்லிவளர்
சோலைநிறை சூழ்ந்திலங்கு தொன்னகரம் செந்நெல்சுவை
ஆலைநிறை யோங்கு மணிவயலும் – நீலநிறப்
பட்டுக் குடைகள் பலவுநிறுத் தாலொத்த
மட்டுப்பூம் பாளை மலிகமுகும் – நெட்டைமடற்
பொன்னங் குடம்பொதிந்தாற் போலமுதிர் நெற்றிளநீர்த்
தென்னம் பொழிலும் சினவேழத் – தின்கைமுகம்
காட்டுங் குலைக்கதலிக் காடும்தே மாம்பொழில்கள்
கூட்டங்கொண் டோங்குங் குராமருத – மீட்டளிகள்
பாடுஞ் செருந்திமகிழ் பாதிரிக டம்புவழை
தாடிமங் கூதாளம் தண்காயா – ஏடவிழுங்
கொன்றை குருந்தஞ் குருக்கத்தி சண்பகம்
மன்றல் மலிமவ்வல் மல்லிகை – துன்று
மருக்கொழுந்து பச்சை மலியவளர் பூங்காத்
திருக்கிளருந் தாமரைசேர் தெண்ணீர்ப் – பெருக்குமலி
வாவிகளு நாற்றிசையு மல்கிமணி மாடங்கள்
துவியனஞ் சேக்கும்பல் சூளிகைகள் – நீவியணி
மாதரெழில் மைந்தர் மகிழு நிலாமுற்றம்
சோதிமணி மாடநிறை தொன்னகராம் – கோதில்
திருவாவி னன்குடியே செவ்வேட் பிரானுக்
கொருவா வுவகையுட னுற்ற – திருநகரென்
றான்றோர் பலரு மறையக்கேட் டேனுளத்தில்
தோன்றாத பேருவகை தோன்றியதால் – ஆன்றபிறப்
பெண்ணிலவை தம்மி லியற்றுந் தவப்பயனு
நண்ணியதா லூக்க நனியுந்தத் – திண்ணியபே
ராவலொடு மப்பதியையண்ணினேன் முன்செய்த
தீவினைகள் தீர்ந்தவெனத் தேறினேன் – ஆவிக்

கிரவணமா மாசையொழித் தீடிலொளி யீயுஞ்
சரவணமாப் பொய்கைதனைச் சார்ந்து—பரவுந்தண்
பூம்புனலிற் றோய்ந்துவெண் பூதியணிந் தாறெழுத்துத்
தோம்பறியச் சிந்தித்துச் சுத்தியொடும் – பூம்புகர்சேர்
துங்கக் கரிமுகத்துத் தூமணியைத் தாள்பணிந்து
சங்கத் தமிழ்வளர்த்த சண்முகனை – யெங்குருவாம்
நீதானே கோதேது நேராத தீங்கனியாம்
வாதாநே ரிற்பவள வாய்முத்தென் – றோதும்
மருவாவி நன்குடிகொள் மாதேவன் சேயைத்
திருவாவி னன்கொடியிற் சேவித் – துருகியுளம்
சூழ்வந்து கும்பிட்டுத் தோத்திரித்துப் பேரின்பம்
மூழ்கி விடைபெற்று முன்னெமது – தாழ்குடியைக்

## அருண்மிகு நந்தி யாச்சிரமச்சீர்

கொத்தடிமை கொண்ட குருசாது நந்தியமர்
வித்தகமே லோங்குமட மேவினேன் – நித்த
நிகமாக மாதிகலை நேர்மையுட னாய்ந்து
சகமாயை விட்டொழிந்து சார்ந்தார்க் – கிகபரங்கள்
என்று மழியாத வின்ப முடனருள்வ
பொன்ற லிலாதசிவன் பொன்னடியே – யென்று
துணிந்து சரியை கிரியைசெய் தொண்டர்
உணர்ந்த சிவயோகர் உண்மை – மணந்தசிவ
ஞானியர்கள் மோனியர்கள் நாதாந்தர் – போதாந்தர்
மேனிலைய சித்தாந்தர் வேதாந்தர் – ஏனையவாம்
பல்வகைய கொள்கையரும் பண்போ டுறவாகி
நல்வகைய நூற்பொருளை நாடுநரும் – கல்கனியத்
தேவார மாதித் திருமுறைக ளன்போடு
நாவாரப் பாடுநரும் நம்மருணைப் – பாவாண

னோதுந் திருப்புகழ்த்தேன் ஓங்கு மிசைவகுப்பு
யாதுந் தருவோ னலங்காரம் – நாதன்
அநுபூதி யாதி யருந்தமிழ்ப்பா வோதி
மனுபூதி பெற்ற மகிழ்வோர் – கனிவாய்
வடமொழியில் மார்க்கண்டன் மன்னுமுப மன்னு
திடமன்னு புட்பதந்தன் சீர்த்த – சடைமுனிவர்
ஏத்தும் புகழ்த்துதிக ளின்னிசையிற் பாடுநரும்
கூத்தனடியார் குழாங்கள் தமக் – கார்த்தவென
ஆறுசுவை நாலுவகை யுண்டி யடுவாரும்
வீறுவீ றுண்ண விளம்புநரும் – வேறுபல
கைத்தொண் டியற்றல் கடனாகக் கொண்டவரும்
சித்தமகிழ் வோடிருந்து சேவிப்பப் – பத்தர்தமக்
கேதுகுறை வும்வாரா தின்னருளால் வீற்றிருக்கும்
சாதுகுரு நாதன் மலர்த் தாள்வணங்கிப் – போதம்
பெருகு கடைக்கணருள் பெற்று மகிழ்ந்தே
திருவனுஞை பெற்றபின் செங்கை – யொருகால்

## பலவினை யொழிக்கும் சிவமலை மாண்பு

கவித்து வரையும் குழித்துக் கடலும்
அவித்த குறுமுனிவ னன்பால் – சவிக்கயிலை
சென்று சிவனடிகள் சேவித்துப் பின்னங்கு
நின்ற விருசிகர நேர்நோக்கி – உன்றன்
ஒளிவடிவுஞ் சத்தி யுயர்வடிவு மாய
நளிமுடிக ளின்னவற்றை நாளும் – அளிமலர் தூய்த்
தென்பொதியவெற்பினிடைச் சேர்த்துத் தொழவெனக்கு
நின்கருணை நேர்ந்தளித்தி நின்மலா – என்பதாய்ப்
போற்றிக் கொணர்ந்தோங்கு பூர்ச்சவனத் தேவைத்துத்
தூற்றிமலர் தாழ்ந்து தொழுதபினர் ஆற்றல்

மிகுமிடும்பற் கண்டவற்றை மேன்மைபொலி தென்பாற்
தகுமுறையிற் கொண்டுவரச்சாற்ற–நெகிழுமனத்
தன்போடு மவ்வாறே யவ்வரையைக் காவடியிற்
றென்பாற் கொடுசெல்வான் செவ்வேளின்–றன்செயலால் 80

ஓங்கு வராககிரி யுத்தரதிக் கிற்பழனிப்
பாங்கரிடை வைத்துப் பசியாற்றி–யோங்கறமை
மீண்டு மெடுக்க முயல்காலை வேலன்மிடுக்
கீண்டு மிளஞ்சிறுவ னென்றெய்தி–யாண்டவ்
வசல மசலமே யாகச் சிவப்பேர்
அசல முடிமே லமர–முசலமொரு
கைக்கொண்ட வல்லிடும்பன் கண்டுசினங்கொண்டெதிர்க்கப்
பொய்க்கொண்ட போர்செய்து பொன்றுவித்து–மைக்கொண்டல்
மேனி யிடும்பனுக்கு மீண்டும் உயிருதவி
ஆனியறு தொண்டனென ஆண்டருளிப்–பானிறுவி 85
இட்டமுட னம்மலைமே லீசன் மகனிருந்தான்
சிட்டர் தொழும்பழனிச் சீர்ப்பெயரான்–நட்டதனால்
பார்மீது நின்ற பழனி மலைகதிரோன்
தேர்மீது செல்லத் திகைக்குமலை–போர்மதனன்
வல்லமைகள் செல்லா வலிமைத் தவமுனிவர்
நல்லமனம் போற்பெருமை நண்ணுமலை–தொல்லையுயர்
விந்த மலையடக்கு மேன்மைக் குறுமுனிவன்
வந்து தெரிசித்து வாழ்த்துமலை–இந்திரனும்
மாலயனும் வானோர்க ளேனோரும் வந்தன்பால்
சாலவலம் வந்துமுடி தாழ்த்துமலை–காலன்வலிக் 90

கஞ்சியவர்க் கெல்லா மரணாக நின்றமலை
செஞ்சொற் புலவர் கவிசேர்ந்தமலை–தஞ்சமென
வந்தார் விரும்பும் வரங்க ளெவையுமுடன்
இந்தா வெனவளிக்கு மின்பமலை–மந்தாரம்

பாரிசா தங்கற் பகமெங்கு நாறுமலை
வேரிசால் சோலை விளங்குமலை—மூரிமத
வெற்புவிளை யாடும் வியன்சுனைகள் மேவுமலை
கற்புக் கொடிகள் கஞுலுமலை—சற்பமொடு
திங்கள்புனல் தண்புயல்கள் சேரு முடியதனால்
செங்கனக மேனி திகழ்தலால்—பொங்குமத

யானைசின வேங்கைபயி லாகத்தால் பாலோடு
தேனெய்புரிந் தாடுந் திறத்தினால்—மானையிடத்
தேந்திமயி லாகத் திருத்திச் சிறப்புக்கண்
ணார்ந்துசிவ ரூபம்தா னாவதனைத்—தேர்ந்துலக
முய்ய வுருவா லுரைக்குஞ் சிவமலைநற்
செய்ய கமலைஅருள் சேர்க்குமலை—துய்ய
பரமமயச் சோதி மயமாம் பழனி
பிரமனெடு மால்போற்றப் பேறு—தருபழனி
கங்கை நதியின் கரைமேவுங் காசியினும்
துங்க மிகுபழனித் தொன்மைமலை—மங்காது

பொங்கு மதிசயங்கள் பூத்த பழனிமலை
எங்கு முளவுலகம் ஈரேழும்—தங்காதல்
கொண்டு புகழக் குலவு பழனிமலை
தொண்ட னருணகிரித் தோன்றலெனை—யண்டும்
செனனம் விடவொருகாற் சேவித்தி லேன்பேர்
கனிவினொடு மென்றும் கரையேன்—தினமுமதன்
பேர்மொழியும் பேர்களடி பேணித் தலைக்கணியும்
சீர்பெறுகி லெனென்று சிந்தையொடும்—ஆர்வம்
பெருகப் புகழும் பெரிய பழனித்
திருமலையின் றாழ்வரையைச் சேர்ந்தேன்—பெருகு

## அன்பர் குழாத்தோடு அணிவரை யிவரல்

மருவியென ஞானமத மார்த்திழியுஞ் சோதிக்
கரிமுகவொற் றைக்கொம்பர்க் கண்டு–திருவடியில்
தெண்டனிட்டுக் குட்டிட்டுத் தொப்பணமிட் டுச்சிரசிற்
கொண்டுகரங் கும்பிட்டுக் கோதில்பல–தொண்டர்குழு
மொட்டையிட்டு மேனி முழுதுந்தூ நீறணிந்து
சிட்டமுடன் காவடிதோட் சேர்த்தியியங்–கொட்ட
உருகா தரத்தா லுடல்புளக மெய்தி
முருகா முருகா முருகா–அருள்பொழியும்
ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் யாவரினும்
வீறுசிவ சுப்ரமண்யவேலவா–தேறுமவர்

அஞ்சுதலை நீக்கியுனத் தாறுதலை யீயவென
மஞ்சுதலை சூழ்பழனி மாமலைவாழ்–விஞ்சுபுகழ்
ஆண்டவா வோமரஹ ராவென்று வான்பரவ
நீண்டபே ரோசை நிகழ்த்திடவும்–ஈண்டுசிலர்
தங்கள் வறுமைச் சவதி கடத்தினதும்
பொங்கு துயர்நோயைப் போக்கியதும்–மங்கலஞ்சேர்
இல்லாட் புணர்த்தியது மின்மகவை ஈந்ததுவும்
பொல்லா எதிரிகளைப் போக்கியதும்–நல்ல
கலைஞானங் கைகூடக் காட்டியதுஞ் சிந்தை
யலையாத நிட்டை யளித்துத்–தொலையாத

பேரின்ப மூட்டியதும் பின்னும் பலபலவாம்
சீரருள்கள் பேசியன்பாற் செல்வாரும் பாரின்கண்
எண்ணரிய கேத்திரங்க ளெத்தனையோ மூர்த்தங்கள்
புண்ணியநற் றீர்த்தம் பொருந்திடினும்–உண்மையினில்
தென்பழனி மாமலைக்கும் தெண்டா யுதக்குகற்கும்
நன்புனல் சேர்ஷண்முகப்பேர் நன்னதிக்கும்–பன்னிடவோர்

ஒப்பில்லை யில்லையென வோதிப் புகழ்வாரும்
கப்பூரந் தேங்காய் கதலிபலம்–திப்பியமாம்
பஞ்சாமிர் தங்ககூட்டுப் பண்டங்கள் ஆனைந்து
விஞ்சுமுழுக் காட்டவுள வேறுபொருள்–நெஞ்சினில்முன் 120
நேர்ந்த கடன்கள் நிரைநிரையாய்க்கொண்டு செல்வோர்
ஆர்ந்தபதி ணெண்டேயத் தன்பர்குழாம்–சேர்ந்துநிறைந்
தெண்ணு ளடங்காதார் ஏறிமலை மீதுசெலக்
கண்ணு மனமுங் களிகூர – நண்ணி
இடும்பன் றிருமுன்னின் றேத்தியருள் பெற்று
நடந்து மலையுச்சி நண்ணி–இடம்பரவு
கோயில்வலம் வந்து கொடிமரமுன் றண்டனிட்டு
வாயில் நுழைந்தேன் மகிழ்வோடும் – ஆயிடைச்செஞ்

## குமரன் கோயில் குலவுஞ் சிறப்பு

சந்தனச்சாந் தின்மணமோ தண்பனிநீர் வாசனையோ
மந்திரமாம் வெண்ணீற்றின் மாமணமோ–பந்தமுறு 125
மாலைகளின் தூமணமோ மட்டற்ற தேனறுநெய்
ஆலைதரு பூங்கழைச்சா றைந்தமிர்தம்–கோலக்
கலயரிடு குங்கலியம் காரகிலின் றூப
மலையு மணமோ வகுத்துச்–சொலவொண்ணா
தோதுந் திருப்புகழ் தேவார மோங்கிசையோ
கீதங்க ளின்முழக்கோ கேடில்லா–நாதசுர
வாசினையோ கண்டா மணிமுழக்கோ தொண்டர்குழாம்
ஆசி லரஹரவென் னார்ப்பொலியோ–பேசுங்கால்
ஏது பெரிதென் றியம்ப லெளிதன்று
சோதி திருவாலயத்துட் தொண்டர்குழாம்–கோதில் 130
ஒருவர் திருமார்பி லுற்றதிரு வெண்ணீ
றொருவர் முதுகிலுற வீண்டித்–திருமுன்னர்ச்

சேவித்து நிற்கும் திறங்கண் டவர்போலப்
பாவித்து நின்று பரவினேன் கூவுதிறற்
செஞ்சேவ லோங்கு கொடிச் செவ்வேற் குமரகுரு
மஞ்சாரு முற்கோல மாற்றியபின்–நெஞ்சார

## அபிராமி மைந்தன் அபிடேக மாடல்

எண்ணெய் சுவைநெல்லி யேரா ரரிசனநல்
புண்ணியவா னைந்துபால் போந்தயிர்நெய்–திண்கழைநீர்
ஐந்தமுதம் தேனிளநீ ராசில்பழச் சாறுநறுங்
கந்தமிகு சந்தனத்தின் தண்கலவை–நந்தும்
பரிமளப் பன்னீர் தபனம் பரவி
விரிகடலில் மொண்டெழுந்து மேகம் சொரிவதென
ஆராத காதலுட னன்பர் முகந்துதவ
நேராரு மில்லாதா னேர்ந்தாடி–நீரீரம்

## தண்டபாணி கொண்ட மெய்க்கோலம்

போகநன் கொற்றிப் பொலனா ணரைப்பூட்டி
சாகைமறைக் கோவணமுந் தற்றுமிக–மோகமுறும்
பல்லுயிரை வாட்டும் பகையான மும்மலத்தைக்
கொல்லுதற்குக் கொண்டபோர்க் கோலம்போல்–கல்லாடை
சிற்றிடையிற் சேர்த்தத் திகழுத்த ராசங்கம்
வெற்றியமர் திண்தோளின் மேலணிந்து நெற்றிமுதல்
அங்கமெலாம் வெண்ணீ றளைந்தநுதற் பொன்பொட்டிட்
டங்கண்மணி மாலையணிந்துநறுந்–தொங்கலும்
இண்டையுங் கண்ணியு மேரார்ந்த வாசிகையும்
கண்டிகையு மேனைக் கலன்களும்–கொண்டணிந்து
தண்டமொரு செங்கைமலர்த் தாங்கிச்சூர் வேரையறுத்
தண்டர்குடி காத்தமுனை யாரயிலைத்–திண்டடோளிற்

சேர்த்தருளி யோர்கை திருவரையில் வைத்தெம்மை
ஆர்த்தபிறப் போடிறப்பும் அன்றயனார்—கூர்த்தெமது
புன்றலையின் மேலெழுதும் பொல்லா எழுத்தினையும்
ஒன்றவழி நோன்புதிறல் உற்றடியார்—நன்றறிந்த
சித்தத்தும் வேத சிரத்தும் அருணகிரி
யத்தன் புகழ்பாட் டடிதோறும்—நித்தனுமை
கண்ணகத்தும் விட்டகலாக் காமர் திருவடியில்
வண்ணச் சிலம்பும் வனைந்தெதிரில்—நண்ணு

## தேசமர் வேலவன் பூசனைச் சிறப்பு

நிலையாடி கண்டு நிலமதிர ஆர்க்கும்
பலவாச் சியங்கள் பரவப்—பலவகைய
இன்னடிசில் பண்ணியங்கள் இன்கனிகள் தெங்கங்காய்
நன்மைமிகு பானீய நல்கியவை—தன்னருளாற்
கைதொட்டு நீக்கிக் கரநீவிச் செங்கனிவாய்
ஐவகைய வாசங்க ளார்ந்ததற்பின்—செய்ய
திருமுகத்தின் வேர்வொற்றித் தீபநறுந் தூபம்
அருவிலைய நீறுதெளி யாடி—விரிகவிகை
சாமரை தால விருந்தஞ்சாந் தாற்றிமுத
லாமவைக ளெல்லா மமர்ந்தேற்றுத்—தோமகலும்
சந்தச் சதுர்மறையும் தன்புகழ்சொல் செந்தமிழும்
கந்த புராணக் கவிதையும்—முந்தும்
இசையும் இயமும் எதிர்முரலக் கேட்டு
வசையில் நடன மகிழ்ந்தே—இசைவாகக்
கற்பூர தீபமெதிர் கண்டு மகிழ்ந்தோர்க்கு
நற்பூதி வேண்டும்வரம் நல்கியபின்—விற்பருதி

## முருகப்பெருமான் திருவுலாக் காட்சி

நீலக் கடன்முகட்டின் நேரே எழுந்தென்னக்
கோலக் கலாபக் குதிரையின்—மேலமர்ந்து

பேரழகுக் கீடழிந்த பெற்றிமையாற் றன்குடையை
மாரன் றிறைகொடுத்தால் மானவொளி–சேரழகார்
முத்துக் குடைநிழற்ற முன்னநந்தன் பால்வளர்ந்த
அத்தன்பாற் கங்கை அடைந்தென்னப் – பத்திமணிச்
சாமரைகள் வீசநிறைத் தாலவட்டங் காற்றசைப்பப்
பூமலிந்த பொய்கைப் புனல்படிந்து–காமருவு
பூந்தாதுந் தேனும் பொருந்த வளைந்தசைந்து
தேந்தென்றல் முன்னடந்து சேவிப்பத்–தாந்தாமென்
றோசைத் தவில்முழங்க உற்றபல தூரியங்கள்
ஆசை தொறும்பரவி ஆர்ப்பெடுப்பத்–தேசுமலீ
கோயில் புடைசூழக் குன்றத்தின் மீதினுலாத்
தாயி லினியன்வரச் சந்நிதிமுன்–நேயமொடு

## விசாகப்பெருமான் தசாங்கச் சிறப்பு

சாமமறை யோதுஞ் சதாசிவவோம் சுப்ரமண்ய
நாமமுட னாயிரநன் னாமத்தான்–ஏமம்மலை
தன்னைச் சிலையாய்த் தரித்துப் புரமெரித்த
முன்னவன் வைத்த முழுக்கருணை–தன்னால்
திருவுருவாய் நின்ற சிவகிரியா னன்பு
பெருகுளத்திற் றன்கருணை பெட்பப்–பெருகிவரு
விண்முகத்தார் மண்ணோர் வியனாகர் மூழ்குபுனற்
சண்முகத்தா றோங்கு தவப்பயன்போல்–மண்ணின்மேல்
வேண்டு நலமீயும் மேன்மைவரத் தாறுடையான்
ஈண்டுபுகழ் நல்லா வினன்குடியான்–மண்டபுகழ்க்
கன்மாப் பலதை கவினுறமேல் வீற்றிருந்த
பன்மாப் புலவர்சொல் பாமாலை–தன்னோடு
பண்கடப் பின்றிப் பமர வினமுரலுந்
தண்கடப்ப மார்பணிந்த தாரினான்–விண்கடந்து

நாகருல கங்கடந்து நாடிநொடிப் போதில்வருந்
தோகைமயில் வேகத் துரகத்தான்—மாகம்
அளவுங் கயிலை யணிநடைபெற் றென்ன
வளர்முகம் மதகரியான் வையம்—தளருமல
ஆரிருளி னீங்கி யருட்சோதி பெற்றுய்யச்
சீரினொடு கூவுகொடிச் சேவலான்—யாரெனினும்
தன்னடைந்தார்க் கின்பங்கள் தந்தருளுங் கந்தனிவன்
முன்னடைவிர் என்றறையு மும்முரசான்—மென்மலர்வாழ்
முந்தை மறையோன் முதலோராற் றோற்றமுதல்
ஐந்தொழிலுஞ் செய்விக்கு மாணையான்—எந்தை
இவனென் றொருசிலர்க ளேத்த வொருபால்

## நீபத் தாரோன் கோபப்பிரசாதம்

புவனங் கடந்தோற் புடைத்துக்—கவலைமிகு
வன்சிறையி லிட்டதூஉ மாமுனிவன் வேள்விவரு
கொன்றகரை யூர்ந்தடக்கிக் கொண்டதூஉம்—பன்றியினைக்
கோட்டை முரித்துக் குழகனுக்கன் றீந்ததூஉம்
கேட்டை மிகுகவுஞ்சஞ் செற்றதூஉம்—கோட்டுமத
மாமுகனை மாட்டியதூஉம் வன்சிங்கற் கொன்றதூஉம்
தீமைமிகு சூர்மாச் சிதைத்ததூஉம்—ஆமிவைபோற்
சேவகங்க ளெல்லாம் தெரிந்தொருபா லேத்திவரத்
தேவர்துயர் தீரவரன் சேயாகி—வாவிதனில்
மாத ரறுவர் மகிழவிளை யாடியதூஉம்
தாதை மனங்குளிரத் தக்கமறை—யோதியதூஉங்
கும்ப முனிக்குக் குருவாக் கருளியதூஉம்
உம்பர் சிறையை ஒழித்ததுஉம்—இம்பர்
மலையிற் சிறைப்பட்ட மாப்புலவன் பாட்டிற்
குலையின் மெழுகா யுருகிக்—கொலைகருதும்

பூதத்தைக் கொன்று புலவனுயிர் காத்ததூஉம்
மாதத்தம் வெட்ட வளர்த்ததூஉம்–மேதக்க
கோழியினைப் பாடும்வாய் குஞ்சினைப்பா டாதென்று
பாழிமொழி சொன்னபெரும் பாவலன்வாய்க்–கேழில்வெண்
முட்டைக்கும் பாட்டு மொழிவித்தாட் கொண்டதூஉம்
சிட்டர் புகழருணைத் தேசிகனை–மட்டற்ற

பேரருளா லாண்டு பிணிநீக்கி யின்பளித்துத்
தாரணியோ ருய்யவெனத் தன்புகழை–ஈரநறுந்
தேன்மாரி யுண்ணத் தெவிட்டாத புத்தமுது
போன்மாறி லாதுபுகல் வித்ததூஉம்–வான்மாரி
போல வரையாது போற்றுவார் யாவர்க்குஞ்
சால வருள்வழங்குந் தன்மையெலாம்–ஏல
எடுத்திசைத்துள் ளன்போ டொருபாலா ரேத்த
வடுத்தவரை யாதரிப்பான் வந்தான்–கடுக்கவின்ற
கண்டன் றிருமகனாங் கந்தன்வந் தான்மூவர்
அண்டர் முதல்வனா வான்வந்தான்–கொண்டல்வணன்

சிந்தைக் கினிய திருமருகன் வந்தான்போர்
விந்தைக் கினிய விடலைவந்தான்–முந்துஞ்
சிவஞான பண்டிதனாம் செக்கர்வேள் வந்தான்
பவரோக நீக்குபவன் வந்தான்–தவறாமல்
இம்மையிலே முத்திநல மீந்தருள்வோன் வந்தானென்
சும்மைமிகு சின்னங்கள் சொல்லெடுப்ப–நல்லதவ
ஞானமுனி வோர் அமரர் நானிலத்தோ ரேனையரும்
வானமதி கண்டவலை வாரிதிபோல்–ஆனபே
ரானந்த வெள்ள மலைவீசி ஆர்ப்பெடுப்ப
ஆனந்த மாம்பழனி யாண்டவன்–ஆனந்த

## அண்டர்கோன் திருவைத் தொண்டன் கண்டார்தல்

மாகத் திருவுலா வாகவரக் கண்டேனென்
ஆகத்தி லூனெலும்பு மானந்த–போகவெள்ளம்
பாய்ந்துநிறைந் துள்ளிடம் பற்றா தெழுந்துபுறம்
பாய்ந்ததெனக் கண்ணருவி பாய்ந்திழியத் – தோய்ந்தபே
ரின்பமெனைத் தென்றுநான் எவ்வண்ணம் பேசுகேன்
இன்பமய வீடதனை யிம்மையிலே–அன்பரினம்
ஆனபய பத்திவழி பாடதனி லார்வரெனு
ஞானமொழி யின்வலிமை நானறிந்தேன்–ஊன
உடலை மறந்தே னுயிரை மறந்தேன்
நடலை மனத்தையு நானென்–றிடலையும் 200
எல்லா மறந்தேன்மற் றிந்த வநுபவம்
வல்லே மறைந்து வருந்தினேன்–பல்காலம்
இன்றளவுஞ் சென்றதுபின் னென்றுவரு மோவென்றென்
றன்றுமுத லின்றளவு மாவலுளேன் – ஒன்றும்

## அன்பன் இன்பவநுபவம் விழைதல்

அறியாதே னுள்ளம் அனல்மெழுகாச் செய்தான்
சிறிதேனு நாயினேன் சிந்தை – வறிதாயும்
மீண்டு மொருகாலு மேவிலன்மற் றாதலினால்
ஈண்டென் மனத்துயர மென்சொல்கேன் – காண்டகைய
காத லிளங்காளை கன்னிக்கு மாலையிட்டு
மாதவளை நோக்காமை மாண்பாமோ – பேதையரோ 205
டாடு மிளம் பருவத் தன்பருளித் தன்னுணர்ந்து
நாடுகின்ற செவ்வியினி னல்காமை – பீடுடைமைக்
கேற்றதல எம்பரம னின்பக் கலவியுளம்
தேற்றஇனி வந்தொருகாற் சேர்க்குமோ – ஆற்றவுளத்

தாசை யளித்த அருளாளன் ஆளாமல்
மோசஞ் செயவுளத்து முன்னுமோ – நேசமுடன்

## தொண்டன் தன் துயரைத் தோகைக் குரைத்தல்

அத்த னவனருளே அல்லும் பகலுநினைந்
தித்தரையோர் பித்த னெனவிருந்தேன்–சித்தம்
ஒருங்கப் பெறுகிலேன் உள்ளேயென் னாதன்
அருங்கமலச் சேவடிகண் டன்பின் – வரும்பெரிய
இன்பப் பெருக்கி னிடைதோயேன் மாயைசெயும்
துன்பப் பெருக்கிற் சுழல்கின்றேன் – முன்பு
மகமாயை நீக்குவதில் வல்லபிரான் றிங்கள்
முகமாறு மோதியுமேன் மோன – சுகமின்னும்
வந்தபா டில்லைவலிய வினைமிடுக்குச்
சிந்தியபா டில்லையுளந் தேறவிலை – அந்தகனை
வென்றகடு வஞ்ச விழிமாத ராசைவலை
நின்று குதிக்கவிலை யாடுகொடி வீடுவய
லாசைப்பை சாச மகலவிலை – நீசர்தமைப்
பின்செல்கை வேண்டுபெரும் பீழை யொழியவிலை
என்னதியா னென்செருக்கு மேகவிலை – பின்னல்படு
பன்னூலிற் சிக்குப் படுமதியுந் தேறவிலை
அன்னோ இதுவோநான் ஆவதுதான் – வென்வேலோன்
சேவடியி னன்பரையுந் தீவினைகள் சேருமெனில்
யாவரினி யுய்குநர்க ளெம்பெருமான் – பாலியுளம்
வாரா திருந்திடவும் வந்து கருணைக்கண்
பாரா திருந்திடவும் பாதமலர் – சீராக
என்புன் றலைமே லிருத்தா திருந்திடவும்
வன்பின் பெரிய வழக்குண்டோ – முன்பரனார்

ஒங்கு குளமுளரிக் கண்ணுதித்தான் நீள்கவலை
யோங்கு குளமுளரிக் கண்ணுதியான் – வீங்குபுனற்
கங்கைக்குங் காதன்மை கண்ணினான் நாயேன
கங்கைக்குங் காதன்மை கண்ணிலான் – அங்கமலப்
பொய்கை பொறுக்கப் பொருந்தியிருந் தானடியேன்
பொய்கை பொறுக்கப் பொருந்திடான் – மைகைசூழ்
வன்னகமேன் மைக்கோயில் மன்னினா னென்னகமாம்
வன்னகமேன் கோயிலா மன்னிலனோ – அன்னை
வளைக்குளாய்க் கந்த வடிவானான் நெஞ்ச
வளைகுளாய்க் கந்தாகி வாரான் – துளக்கமறச்
சொப்பனத்தி லிந்திரன்றன் சேய்க்குறுதி சொல்லினான்
சொப்பனத்தி லும்எனக்கேன் சொல்லிலான் – ஒப்புறுதன்
தந்தைக் குவகை தழைக்கவொரு சொற்றந்தான்
சிந்தைக் குவகையென்பாற் செப்பிலான் – முந்தை
யலையாழி வற்ற வயில்விடுத்தா னுட்க
வலையாழி வற்றவுளம் வையான் – மலையதனை
நெஞ்சம் பிளந்துசிறை நீக்கினா னென்வினையின்
வஞ்சம் பிளந்துசிறை மாற்றிலான் – தஞ்சம்
அடைந்தேனுக் கென்னே அருளா திருந்தான்
உடைந்தே னுளம்கவலை யுற்றேன் – மிடைந்தெதிர்ந்த

## ஐயனருள்வனென் றடியான் தேறல்

வானோரை வைவேலால் மாட்டியுயி ரீந்தபிரான்
ஏனோரை யாளா திருப்பானோ – வானோர்க்கு
விச்சுவரூ பங்காட்டி மெய்ம்மை யுணர்த்துபரன்
நச்சுமெமக் கின்காட்சி நல்கானோ – அச்சுதற்குச்
செம்மேனி தந்தளித்த செவ்வேள்நம் மாசழித்திட்
டிம்மையிலே செம்மைகனிந் தீயானோ – உம்மையில்

தீயரக்கன் பாசத்திற் சிக்கினரை மீட்டான்நம்
தீயவினைச் சிக்கைச் சிதையானோ – நோயினொடும்
தென்னவனார் கூனிமிர்ந்த சீராள னம்பிறப்பின்
இன்னலுறு கூனிமிர்த்த வேலானோ முன்னொருத்தி
தன்றுயரை நீக்கிக்கை தந்துகரை யேற்றினவன்
என்றுயரை நீக்கிக்கை யீயானோ – அன்றொர்
வணிகன் உளத்துயர மாற்றினான் தன்னைப்
பணிவேன் உளத்துயர் பாற்றானோ – அணியிழையாய்
வெந்தவெலும் பைக்கண்ட வெங்குருவேந் தன்னெமது
வெந்தமனந் தேற்ற விரகிலனோ – சிந்துபல
வென்பிழைபொ றுத்தருளும் எம்பெருமா னின்புதல்வன்
என்பிழைபொ றுத்தருள வேனியையான் – தன்றொழும்பர்
செய்தபிழை பாராத தீரனென வுந்தமிழால்
வைதவரை வாழ்த்துபெரும் வள்ளலென்றும்–பொய்யாமல்
ஏழைக் கிரங்கும் பெருமா னிவனென்றும்
மோழைமை நீக்கு முதலென்றும் – ஏழைப்
புலவர்க் குசாத்துணையாம் புண்ணியவா னென்றும்
கலவினரைக் காத்தருள்வா னென்றும் – குலவி
யொருகான் முருகாவென் றோதுவார் சென்னி
யிருகாலும் வைத்தருள்வான் என்றும் – பெருகு
கலியில் வரதனருட் கந்தனினி யெம்மை
நலியில் விடானெனவும் நம்பி – மெலிவில்
பெரியாரை யின்றுணையாப் பேணியுளத் துன்பம்
தெரிவாகச் சொல்லிநமைத் தேற்ற – உரியான்பால்
தூது விடுக்கத் துணிந்தேன் களிமலிலே

## கலபமயிலின் பலபெயர்ப் பெருமை

மாதர்நடை கற்ற மயூரமே – சீதவளம்

மிக்கமுகில் கண்டுவகை மேவித் தழைபரப்பிப்
பக்கமவிர் செக்கர்பொன் பச்சைமுதல் – மிக்கநிறம்
ஓங்கி யொளிவீச வொண்வா னகந்தழுவி
ஓங்குமரன் மேலிருக்க வுற்றழகு – தாங்கும்
நவிரமே நெய்யுந் நறும்பூவு மின்றி
தவிரா தழகுதழை கூந்த – லவிருஞ்
சிகாவளமே யாண்மை சிதையாச் சிகண்டீ
சுகாரம்ப மாமினிய தோகாய் – ஒகரமே
சேர்ந்தாரைக் கொல்லாது தீப்புகையு மேவாது
சார்ந்தாரைக் காத்தளிக்கும் தண்சிகியே – வார்ந்தவிசை
யின்னரம்புக் கட்டி லியையாமற் பேரன்பர்
கின்னமுள தீர்த்தருளுங் கேதாரம்! – வென்வேலின்
மின்னலெழச் சேவல் மிடற்றி னொலிமுழங்க
மன்னிதய வானத்து வந்துநிறைந் – தின்னருளைக்
கந்தனெனு நன்மேகங் காலத்திற் பெய்வதனால்
பந்தமிகு பல்லுயிராம் பைங்கூழ்கள் – சந்ததமும்
கேடின்றி யோங்கச்செய் கேதார மேயெளியேன்
நாடும் பெருந்துணையே நாயகமே – வாடும்புன்

## ஏனைய தூதுக்கிவையிவை குறையெனல்

நெஞ்சத்தைத் தூது நிகழ்த்தவெனில் அன்னதுநீள்
வஞ்சத்திற் றேர்ந்ததுவேல் மன்னனெதிர் – கொஞ்சத் தில்
சேராது சேர்ந்தாலும் செம்மை பெறநிலைமை
யோராது மேலோர்ந் துரையாது – சீராகக்
கந்தனுருக் காணிற் கரைந்தழிந்து தன்னிலைமை
சிந்திமறந் தென்குறையைச் செப்பாது – முந்திப்
பலகாலு மேகுகெனப் பன்னி முயன்றும்
விலகா முயற்சியினை விட்ட – தலகைநிகர்

வன்பொறிகள் செய்யு மயக்கா லுரனழிந்து
புன்செயலின் வீண்பொழுது போக்கிற்றால் – வன்பனைவாழ்
அன்றிலினை யுய்க்கி னதுதன் பெயர்மலையை
யன்றெறிந்த துண்ணினைந்தே யஞ்சாதோ – அன்றியுநீள்
புல்லினத்தைச் சேர்ந்து புணர்ச்சிக்கே யுள்ளழியும்
ஒல்லுவதோ நாயகன் முன்னுய்ப்பதற்கே – மெல்லிறகின்
அன்னத்தை யேவினதுதன்னை யாள்பிரமன்
முன்னத்த னாற்சிறையின் முன்னியதை – முன்னித்
திருமுன்னர்ச் செல்லாது செம்மையிலா வெள்ளை
பெருமான்முன் சென்றுணர்ந்து பேசா – தருமைமிகு
கிள்ளைதனை யுய்த்தாற் கிளர்பூசை யென்னிலுயிர்
விள்ளுமுயர் கோயிலினுள் மேவுமோ–தெள்ளுதமிழ்
வண்ணப்பா வல்ல மலர்க்கையமர் பைங்கிளிமுன்
நண்ணத்தா னுள்ளத்தே நாணாதோ–எண்ணரிய
தந்தை வழிதன்னிற் சாருந் திரும்பலரி
தத்தை யெணித்தத்தை யஃதென்பர் – நத்துமொரு
நாகணவாய் தன்னைவிடின் நண்ணுமோ சென்றுரைத்துப்
பாகணவாய்ச் சொல்லியர்கைப் பட்டிடுமே–யேகுகெனத்
தூதுண்டு வாழ்புறவைச் சொல்லுவதோ காரியத்திற்
றீதுண்டு பண்ணும்பின் தேரிடிற்க–போதியது
மாங்குயிலைப் போக்கவெனில் மாதா வுடன்செவிலி
தாங்கரிய கூக்குரல்யார் தாமகிழ்வர் – ஓங்குமறை
முன்னப் பட்டாண்கண் முனியப்பட் டான்உடலம்
பின்னப்பட் டான்முன் பிடிபட்டே – பின்னலொடு
சின்னப்பட் டெம்மான் சினத்திற் படுமாவிற்
பின்னப் படும்பிகம்போய்ப் பேசுவதென் – இன்னிசைய
வண்டினையு மானினையும் வள்ளல்பாற் செல்கவெனில்
அண்டுபவோ வேங்கையுரு வானானை – மண்டுசுவைச்

செந்தமிழைச் செம்பொன்னைச் செப்பிவிடு வோமென்னில்
தந்தமுரை யும்பிறரே சாற்றுபவே – அந்தில்பல
பந்தப் படலும் படைத்தமையா லெம்முரையை
எந்த வகையி னெடுத்தியம்பும் – கந்தமிக
உண்டெனினும் வேற்றுமையு மல்வழியு மோர்வரிய
வண்டிறல்சேர் பஃறிரியும் வாய்ந்தனவே – மண்டுநறுந்
தென்ற லுனதெச்சிற் செங்கணரா வாயெச்சில்
நன்றலவே நாயகன்பா னாமுய்த்தல் – சென்றுவர
மேகத்தைத் தூண்டவெனில் வெய்ய விடிக்குரலும்
ஆகக் கறுப்பும்வா யங்காந்தால் – வேகத்தீக்
காலுதலு முண்டினிய காலமறி யாதழகு
சாலுமொரு பாடினிதான் சார்கவெனில் – மாலாகும்
கள்ளும் கடியூனும் காதலித்துண் பேதையரை
வள்ள லெதிர்விடுத்தல் மாண்பாமோ – எள்ளப்
படுமிவைகள் தூதிற்குப் பண்புடைய வல்ல
நடுவறிந்து தூது நவிலத் – திடமறிவு

## மயிலின் தூதேவாய்ப் புடைத்தென்றல்

பேரழகு கண்ணோட்டம் பேணுதிற லின்னவெலாம்
கூடுமயி லேயுன்பாற் கூடியுள – வீரன்மேல்
ஏறி யமர்ந்தகுறிப் பேவுஞ்சொல் லிங்கிதங்கள்
வீறு திருவடிமேல் மேவுநிலை – தேறியருள்
எம்மான் றிருவுளத்துக் கேற்றநடை பெற்றனைமற்
றம்மானு நின்குறிப்பை யாதரிப்பான் – தம்மான்
தயவினிலுந் தன்னடியார் தந்தயவே மிக்க
நயமுடைய தென்றுநவில்வர் – வயமிகுந்த

## அண்டர்கோன் மயிலின் திண்டிறன் மாண்பு

மாமயிலே நின்பெருமை நீமதிக்க மாட்டாய்கேள்
தா மறியார் சான்றோர்கள் தம்பெருமை – பூமிதனில்

வாழ்வோரில் வானகத்தில் வாழ்வோரிற் பாதலத்தில்
வாழ்வோரி லுன்புகழை வாழ்த்தாரார் – கேழ்கிளரும்
நீலக் கலாபியே நின்றோகை மேல்விரிந்தால்
ஞால முழுதுநிழல் நல்குமே – ஆலித்துன்
தோகை யுதறினதிற் றோன்றுஞ் சுழல்காற்றின்
வேகம் பொறாதிமயம் வேர்பறியும் – மாகமமர்
அண்டங்க ளத்தனையு மாராயி னோர்சிறைக்குள்
அண்டங்கள் போலடக்கு மாற்றலுளை – மண்டலைகொள்
பாந்தளினைப் பற்றிப் பதைக்க உதறியதால்
காந்து மணியின் கணஞ்சிதறிப் – போந்த
நெடுவான நின்றிறங்கின் நீயிறுங்கென் றெண்ணிக்
கொடுவாயிற் கொத்துதலுட் கொண்டே – யுடுவாகி
இன்னங்கீழ் வாரா திருக்கின் றனவீசன்
மின்னங்கேழ் வில்லான மேருமலை – தன்னிலவன்
பூட்டுநெடு நாண்டலையைப் பொள்ளெனநீ கொத்தியதால்
பூட்டுவிட நீண்டு பொலியுமால் – ஈட்டுவலி
மிக்கசிறை நீயுதற மேவுவளிக் காற்றாது
நெக்குரகன் சென்னி நெளிப்பதனைத்–திக்கதிரும்
பூகம்ப மென்று புகல்வார் பரிதிமதி
சோகங் கொளத்தொடர்ந்த சூளரவம் – மாகனக
மாயூர மென்றுன்பேர் வாழ்த்தக்கேட் டஞ்சிநீர்
வாயூற விட்டு வளைபுகுமால் – பாயான
சேடனை நீகொத்திச் சென்றதனால் மாலந்தோ
நாடறிய வாலமளி நண்ணினான் – ஆடல்விடங்
கண்டத்துள் வைத்தருளுங் கண்ணுதலார் செஞ்சடைமேற்
கொண்டத்தா லஞ்சாத கோளரவம் – அண்டத்தே
ஏகுங் கருடற்கண் டேண்டா சுகமாவென்
றாகுங் கருவத் தழைக்குமே – வேகமிகு

தோகையே நீநெடிய தூரம்வரக் கண்டாலும்
போகுமே வெண்டலையின் பொந்தினுளே – மாகருடன்
நின்னாற் புடைப்புண்டு நெக்கழுத காரணத்தால்
அன்னான் கலுழனென லாயினான் – மன்னுமலர்க்
கஞ்சத்தான் ஊர்தியுனைக் கண்டுமிக அஞ்சியதால்
அஞ்சப்பேர் பெற்றதனை யாரறியார் – விஞ்சப்பேர்
பெற்றநின தாற்றலெவர் பேச்சுக் கடங்குமது
நிற்கநின தேர்க்கு நிகருண்டோ – பொற்கலபம்

## மணிநிற மயிலின் அணிநடம் புகழ்தல்

வட்ட வடிவாக வளைந்துநீ யாடுங்கால்
கட்டழகுக் குள்ளங் கரையாரார் – இட்டமுடன் 305
நீல முகிலெழினி நேர்வீழ்த்தி நீநடிக்கும்
கோல முளநெகிழ்க்கக் கோவிமையோர் – சாலமலர்க்
கண்மாரி யென்றே விளம்புவரால்–கண்ணுதலார்
விண்மாரி பெய்வதனைக் காசினியோர் தேற்றாது
தாமே நினக்கொப்புத் தாண்டவத்தில் ஈண்டுமெழில்
வாமே கலையார்கள் வாஞ்சித்துத் – தாமேக்கற்
றெத்தனைநாள் கற்றாலு மின்னங்கை வாராமல்
இத்தரையில் மெல்லியரென் றேச்சுற்றார் – மெத்துசினக்
காளிநட மாடியொரு காலெடுக்க மாட்டாமல்
வாளிமுகந் தாழ்த்தவையில் வைகினாள் – நீளிமயப் 310
பூம்பாவை நாடறியப் பொன்மன்ற மேறிடினும்
கூம்பாதெம் மானடமே கும்பிட்டுத் – தாம்பார்வை
வாங்காமல் நோக்கியினும் வைகினாங் தானடிக்கப்
பாங்கான வாற்றலினும் பற்றாமல் – பூங்கமலை
எய்யாமல் மாறிப்பல் இல்லந்தோ றாடியுமென்
செய்யா ளெனும்பெயரே சேர்ந்தாளால் ஒய்யாரத்

துன்னைப்போ லாடலுஞற்ற முடியாமல்
அன்னத்தைப் போல்வெளுத்தா ளக்கலைமான் – நின்னோர்
நடையே பயின்றும் நடைகைகூடாமல்
இடையே யரம்பை யிளைத்தாள் – தொடைவேலோன்
மேலாக நீவிளங்கும் மேம்பாட்டுக் கொப்பாகு
மாலாக நாட்காலை மாலைதொறும் – மாலாழி
செங்கதிரை யோங்குந் திரைமேற் சுமந்தியலா
தங்கம்வெதுப் புற்றே யரற்றுமே – பங்கமிலா
மாதையன் மானாருன் சாயல்தாம் வாஞ்சித்தும்
பேதையரென் றெள்ளத்தான் பெற்றாரே – மேதைமிகு

## கண்ணெழின் மயிலின் புண்ணியப் பெருமை

கேகயமே யுன்போலக் கேடில்லா மாதவமெவ்
யோகருக்கு மெய்துவதோ வொண்சுவைய – பாகுமொழி
மாலிமய வெற்பன் மடமயிலு முன்னுருவாய்
ஏலியம மாதிதவ மீங்கியற்றி – மேலினிய
சங்கரனார் பொங்கினருள் சார்ந்தனள்பின் னும்மவர்தம்
பங்ககலா மேலாம் பதம்பெற்றாள் – பொங்குமலர்ச்
சாகை பரப்பிநெடுந் தண்முகில்சூழ்ந் துன்வடிவ
மாகையொடுன் பேர்படைத்த வாதரவால் – மாகமுயர்
குன்றமெலாங் கோயிலாக் கொண்டான் குமரனுனை
யன்றி யவற்கினியார் யார்மயிலே – குன்றருவி
யார்ப்ப நடந்தனைய யானை தகர்முதலாப்
போர்ப்பரிகள் பெற்றிருந்தும் புண்ணியன் – காப்பதற்கு
மெய்யன்பர் முன்னர்வரும் வேளையெலா நின்மேலாக்
கையின்வடி வேலோடும் காட்சிதரும் – செய்ய
மணிநாவில் வேலு மயிலு மெனுஞ்சொற்
கிணையான மந்திரந்தா னேதோ – பணிவோடு

மாமுருகன் பேரை மறந்தாலு முன்பெயரைச்
சேமநினை வார்மறவார் செஞ்சொல்லின் – பாமகிழ்வா
லாடும் பரிவே லணிசேவ லென்றுருகிப்
பாடும் பணியிற் பணிக்கவென – நாடும்
அருணகிரி பாடும் அநுபூதி முன்னர்
வருமகிமை யுன்றனக்கே வாய்த்த – துருவாய்
அருவாய் உளதா யிலதான கந்தன்
குருவாகி வந்து குறைகள் – ஒருவிப்பேர்
அன்பருடான் நல்கிழு வாசைத் தொடரறுத்துப்
பின்பநு பூதி பெறுவித்த – துன்பெயரைக்
காதலுடன் பாடியதோர் காரணமே கேகயமே
ஓதலுள னுன்பெயர்நா னுள்ளுருகி – யாதலினால்
என்குறைக்கு நீயிரங்கி எம்மா னிடந்தூது
சென்றுவரல் வேண்டுமுனைச் சேர்ந்தோரை – என்றும்

## பணிபவர்க் கருள லணிமயிலியல்பு

பரிந்தளித்தல் நின்னுடைய பண்பன்றோ வேந்தன்
தெரிந்தசபை முன்னருணைச் செம்மல் – வருந்தலறத்
தேவர் பெருமாளைச் செவ்வியுறக் கொண்டுவந்து
தாவில் புகழ்படைத்த தாளாள – ஆவலினால்
கொண்டுவா விங்கு குமாரகம் பீரனையென்
றண்டமிழ்கேட் டவ்வண்ணம் சாதித்துக் – கண்டெரியா
முத்து வயிரவன்றன் முன்காட்சி தந்தருளும்
சத்தி படைத்தவனீ தானன்றோ – அத்தனுன்
மாற்றந் தனைத்தள்ள மாட்டானிஃ தியாவர்க்கும்
தேற்ற மினிய சிகாவளமே – ஆற்றவும்
தானே தயவுடைய சண்முகன்பாற் காலத்துன்
போனேயர் என்குறையைப் போய்ப்புகன்றால் – நானேயம்

வைத்தளியே னென்று மறுப்பானோ தொண்டர்தமைத்
தத்தளிக்க விட்டுச் சகிப்பானோ – மெத்துசின
மாயைதன் சேய்க்குந்தன் மாட்சியுருக் காட்டியவன்
நேயருக்குத் தன்காட்சி நேரானோ – மாயைக்
கொடுமை களையவல கொற்றவனென் பாசக்
கொடுமை களையவருள் கூர்வான் – நெடுமொழிசொற்
றேசும் புலவர்பா லின்னலுறுத் தன்னவர்தம்
மாசில்கவி பெற்றருளும் வண்மையான் – கூசுமுளத்
தன்போ டியான்புனைய லானதமிழ் மாலையையும்
இன்போடு தன்றோளி லேலானோ – முன்பு
குழறிக் குழறிக் குமரனைப்பா டென்னும்
பழமொழியுங் காயாகற் பாற்றோ – குழகனித்
தள்ளா தெளியனையுந் தாங்குவான் நீகுறிப்பின்
கொள்ளே னிதிலையம் கோன்முன்னர்த் – தெள்ளும்
உருவகதா ளத்தினீ யாடி லுருகி
உருவகத்தி லுன்ன லுணர்வான் – பெருமான்முன்
ஆதியெனுந் தாளத்தி லாடினா லின்றுணைநீ
யாதியென வேண்டு மதையறிவான் – தீதிலாச்
சம்பையினி லாடிற் சனனப்பை மேவுமொரு
வம்பைத் தவிர்க்கும் வழியருள்வான் நம்பும்
திரிபுடையி லாடிற் றிரிபுடைய மாயைத்
திரிபுடையச் சீரருள்கள் செய்வான் – திரிவின்றி
மட்டிமத்தி லாடினால் மட்டிமையை நீக்கியருட்
சிட்டர் குழுநடுவே சேர்ந்திடுவான் – நட்டம்
துருவத்தி லாடினால் றொல்லைவினை தீர்த்துப்
பெருநிலையில் வைத்தெம்மைப் பேணிக் – குருவாகி
வந்தருளி வாழ்விப்பன் மாமயிலே நீயுவந்து
சந்தமொடு முன்நடித்துச் சண்முகனை – முந்தி

மகிழ்வித்து நல்லமயம் வாய்த்தென் குறையைப்
புகழ்வித் தகத்திற் புகன்றால் – துகிரனைய

## நன்றிமறவேனெனத் தொண்டன் நவிலல்

செஞ்சிறிய கால்விரிந்த தோகை மயிலேறே
நெஞ்சிதனி லிவ்வுதவி நேர்நினைவேன் – தஞ்சாய் 355
உயிருதவி செய்தாரை உள்ளளவும் போற்றல்
மயர்வறுநன் மேலோர் வழக்காம் – இயலிசைதேர்
அண்ணா மலைப்புலவ னாரைமை யாற்புகன்ற
பண்ணார் மயில்விருத்தம் பாடுவேன் – எண்ணார
ஆதவனு மம்புலியு மாதிவரு சீர்வகுப்பும்
ஆதரவிற் பாடிமகிழ்ந் தாடிடுவேன் – கோதறுசீர்
வண்ணச் சரபன் மயிலலங்கா ரஞ்சொல்லி
யுண்ணெக் கருகி யுனைப்புகழ்வேன் – உண்மைப்
பரிபுர ணானந்த போதம் பகர்ந்த
பரிபூர ணானந்த பவ்வம் – அரிதாம் 360
தகரா லயத்தின்சீர் சாற்றுமுழு ஞானி
குகனார்க்கே யுள்ளங் கொடுத்தோன் – அகமார்
திமிரவிருள் நீக்கியருள் சித்தாந்த பானு
குமரகுரு தாசனுனைக் கூறும் – தமிழ்நலஞ்சால்
கனமனமு நீராக்கும் கற்கண் டினைப்பழிக்கும்
பொன்மயிலின் கண்ணிசொலிப் போற்றுவேன்–கன்மவினைக்
கட்டறுக்கு ஞானக் கதிர்வேற் பெருமாற்குத்
திட்டமுற என்கருத்தைச் செப்புவாய் – தட்டறவே
பல்லுயிர்க்கு நல்லுயிராய்ப் பாங்குபயின் றுள்ளமர்ந்த
தொல்பரமற் கியாம்விரித்துச் சொல்வதெவன் – மெல்லவெம
துள்ளத் திருந்து மொழித்தபெருங் கள்வனுக்கு
வெள்ளை மதியேன் விளம்புவதென் – வள்ளலே

## தொண்டன் தன் குறைசொல்லி விடுத்தல்

வாழையடி வாழை எனவாழ் வழியடிமை
ஏழைத் தொழும்ப னிவனொருவன் – மோழைமையாற்
குற்றமொரு கோடி குயிற்றிடினு நின்னடிக்குக்
குற்றங் குயிற்றக் குறித்தறியான் – கொற்றவனே
உன்னை யொழிய வொருவரையு நம்புகிலான்
பின்னை யொருவரையும் பின்செல்லான் – உன்னடியார்
பொன்னடிகட் கென்றும் பிழைசெய்யான் அன்னவர்கள்
சொன்ன பணிபுரியச் சோர்வடையான் – முன்னைப்
பரம்பொருளும் பல்லுயிரும் பண்ணும் வினையும்
நிரந்த கதிவகையு நேரார் – அரந்தைதரு
கூட்டத்துட் கால்வையான் கோதில்சரி யாதியிகழ்
ஏட்டைக் குறும்பர்குழு வெய்திடான் – வீட்டினைப்
பொன்னை மணியினைப் பொற்றொடியார் பொய்ம்முயக்கை
அன்னத்தை யாடை யணிகலனை – என்னவெனத்
தேடித் திரிந்து திரட்டித் தொகுத்துவைத்
தீடழியுந் தாம்பிரம மென்றுரைக்கும் – கேடர்மொழி
கொள்ளான் இரண்டொன்று கூறிக்கைக் குத்திடுவார்
நள்ளான் பொய்ஞ் ஞான நயந்திடான் – கள்ளமாய்த்
தன்னை மறைத்த தமமான வாணவமும்
கன்மத் தளையும் கழன்றுபெரும் – வன்மாயைப்
பேயைத் துரத்திப்பின் பேசா வநுபூதி
ஏயப் பெரிதுநசை யெய்தினான் – நீயான
ஞான விநோத நலமே விரும்பினான்
ஊனந் தவிர்த்தாளல் உன்கடன்காண் – தீனர்பால்
ஓங்குங் கருணை யுடையானே அவ்வடியான்
தீங்கெவையு மோர்பொருட்டாச்சிந்தைகொளேல்–ஈங்குவா

என்னடிமை நீயென் றிசைத்தவனை யாட்கொண்டுன்
பொன்னடிகள் சென்னிக்குப் பூவாக்கி – முன்னை
வினைமாசு நீக்கியடி மெய்ஞ்ஞான மாக்கி
யெனதியான் எனுஞ்செருக் கின்றி – நினையே
யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிமெய் யின்பம்
புணர்ந்து பிரிவு புணரா – திணங்குமலர்த்
தாடலைபோ லோவாத தத்துவசித் தாத்துவித
நீடனுப வத்தி னிலைநிறுத்தி – யாடகத்தின்
மாடுமனை மக்கடமின் வாழ்வின் மயங்காமற்
கேடுவிளை நல்குரவு கிட்டாமல் – ஏடவிழுங்
கூந்தலினார் காமக் குழியில்வீழ்ந் தாழாமல்
தீந்தமிழ்ப்பா விற்றுத் திரியாமல் – சேந்தநின
தின்புகழ் நூலன்றி யேனைப்புன் னூலோதிப்
புன்பொழுது போக்காமற் பூசனையு – மன்புமிகு
நல்ல செபஞ் சேவடியி னாட்டமுத லாயநலம்
வல்லைபெற வந்து வரமருளி – யெல்லையில்பே
ரானந்த வீடு மவனுக் கருள்புரிக
ஆனந்த ரூபமுரு கையனே – ஊனமிலாச்
சத்தேசித் தேயோஞ் சதாசிவமே யென்றுரைத்துச்
சித்தேசன் நல்லருளைச் சேர்ப்பிக்கச் – சித்திரநீள்
தோகைக் குடைவிரித்துத் தோமில் நிழல்பரப்பிப்
பாகுமொழி யன்னையர்கள் பக்கமுற – வாகைபுனை
ஞானவடி வேல்வலக்கை நண்ணமுரு கேசனைப்
பானல்வாய் ஞானம் பரிமளிக்கும் – மோன
பரமகுரு நாதனைப் பண்ணவர்தம் கோவை
வரதனைமெய் யன்பர்தமை வாழ்த்தும் – விரதனை
மாணிக்க வண்ணனை வண்பவளத் தின்றிரளை
ஆணிக் கனகத்தை யாரொளியைப் – பேணுநரைப்

பேணிப் பிறப்பிறப்புப் பேராழி நீக்கியருள்
தோணியை முத்தியினைத் துய்க்கவிடும் ஏணியை
அன்பர்க் கிருதிநியை யாரமுதை யோர்முக்கண்
இன்பக் கரும்பி லெழுஞ்சாற்றைத் – துன்பமற
வேததரு மீது விளையு நறுந்தேனைத்
தீதகலு மெய்ஞ்ஞனாத் தீங்கனியைச் – சோதி
யயில்வே லருட்பழனி யாண்டவனை யென்பால்
மயிலே விரைந்தழைத்து வா.

## வெண்பா

வேண்டவனைத் துங்கொடுக்கும் வேலவனைச் சீலருளத்
தாண்டவனைத் துங்கமிகு தண்பழனி – யாண்டவனைச்
சின்மயனை யின்றுணையைச் செவ்வேளை யிவ்வேளை
பொன்மயிலே கொண்டன்பாற் போது.
தோகைமயி லேறியிரு தோகையர்கள் பாலமர
வாகைபுனை வேலை வலத்தேந்தி – யோகையொடும்
வந்தடிமை சிந்தைகுடி வாழ்பழனி யாண்டவர்
பந்தவினை தீரருட்கண் பார்.

ஞானசம்பந்தன் நற்கழல் வாழ்க.

பழனியாண்டவர் மயில்விடுதூது முற்றிற்று.

# PALANIANDAVAR MAYILVIDU THOOTHU

The lady-love remains separated from her beloved. The promised period of the return of the lover had long passed. She bewails her separation. She praises the birds and things that are fit to tell her beloved the state of her mind, tortured by the pangs of separation. This is sensual love.

The Pasu(Soul)bound by the rigorous chain (Pasa) of birth and death and wandering forlorn casts its eyes towards Pathi (the Lord) and with yearning heart desires to reach Him. This is Bakthi, the love for the Lord.

As this is Enduring Bliss, the mind longs to behold the Stealer of the heart and hear His blessed name. Looking at the Lord as the lover and sending Him a message in the way of subjective literature Saint Sambanda who has no peer in poetry shows the path way to the feet of Siva.

His devotional hymns give us joy and serve to sever our bonds. Sambanda himself says in his decade sung at Thonipuram (Sirkali) that those who understand the meaning of the message put in the mouth of the lady-love in the poem will attain the

Bliss of Siva. Here, the lady love is the soul; the beloved is the Lord; the messengers are the manifested Creation in various forms.

Kaviarasu **K. NATESA GOUNDER** is a great devotee of Tirugnanasambanda and is doing yeoman service for Tamil literature and Saiva Philosophy. Having the fervour of the lady-love he yearns to reach the Lord Palani Andavar. He sends the peacock as his messenger. He has conveyed his message suffused with beauty of literary form, depth of meaning and fervour of devotion. In order that all may fully comprehend the inner meaning of the devotional lyric, I have written this in prose form.

The work, "Palaniandavar Mayilvidu Thoothu" relates how the author worshipped Lord Dandayutha -pani at palani, felt a little of this bliss and how this faded and how in order to get back the same experience, the peacock in bidden to bring Muruga.

## PALANIANDAVAR MAYILVIDU THOOTHU

### THE INCOMPARABLE GREATNESS OF SUBRAMANIA :-

The book contains about 400 lines. The unparalleled greatness of Lord Subrmania is explained in lines 1 to 21. The Subtle Truths of Saiva Siddantha

Sastras are briefly but clearly set forth. The latter half of these lines explain the significance of the names of the youthful perfect Lord as Muruga, Subramania, Guruswamy, Guha and Kumaran.

Subramania is unknowable even by Vishnu, Brahma, Indra, the Four vedas, the Devas and others. He is the Lord without Beginning, Sign, and Attribute. He is the Paramasiva seated ever in the hearts of the wise. He is the Siva whom knowledge seeks to know. He is the Divine Bliss which wells forth without end. For the souls to attain salvation, freed from the taint of the three Malas (impurities), He assumes in His infinite mercy many shapes-with Form or without Form, and with Form-cum-Formalessness according to the needs of His devotees. he is inseparably inter-penetrated with all beings. Unless His own Grace vouchsafes knowledge of Himself, none can expound His Nature. And no faculty can measure Him. He is the one Substance which all religions seek to scale, each in its own measure. He is the Brahma whom the Vedas proclaim. He is the Sadasiva who performs the three-fold action of Creation, Sustenance and Destruction. He is the Mystic meaning of the Pranava mantra 'OM'. He is the Muruga of Uncreated Form, Perpetual Youth, Divine Fragrance that never fades.

